Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 075 | செவ்வாய்க்கிழமை | தை 27 ஆம் நாள் 09 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111



# கொரோனா தொற்றால் யாழில் முதல் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 9

கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று ஒருவர் உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட முதல் உயிரிழப்பு இதுவாகும். 18

## திறந்தவெளியை கடப்பது ஆபத்து!

**கோத்தாவுக்கு பொன்சேகா எச்சரிக்கை**

கொழும்பு, பெப்.9

எதிரிக்கு முன்பாகத் திறந்த வெளியை கடப்பது ஆபத்தானது என்பதை நான் மீண்டும் கோத்தாபயவுக்கு நினைவு படுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா.

தனது சமூக வலைத்தளக் கணக்கில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் 19

## ஐ.நாவை திருப்தி செய்ய இலங்கை தயார் இல்லை

*அரசு அலட்சியப் போக்கு*

கொழும்பு, பெப்.9

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் புலம்பெயர் தமிழர்களின் தேவையைப் பூர்த்திசெய்ய இலங்கை அரசு தயாராக இல்லை என்று தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத் துறை அமைச்சருமான கெஹெலிய ரம் 19

## மக்களுக்காகவே ஐ.நாவை பகைத்ததாம் கோத்தா அரசு

*அனுதாபம் தேடுகிறார் மஹிந்த*

கொழும்பு, பெப்.9

போரை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் குற்றவாளியாக்கியது. பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கு அறிந்தும் நாட்டுக்கு எதிரான தீர்மானத்தில் 19

**முச்சந்தி முரளி**



**"கூலிக்கு மாரடிச்சு போர் செய்ய வந்தவைக்கு உரிமை போராட்டங்களும் அப்பிடி கூலிக்கு செய்த மாதிரித்தான் தெரியும் பாருங்கோ"**

## பேரணியில் இணைந்தோருக்கு எதிராக முல்லைத்தீவில் வழக்கு

முல்லைத்தீவு, பெப்.9

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைகளைக் கண்டித்து நடத்தப்பட்ட "பொத்துவில் முதல் பொலிகண்டி" வரையான கவனயீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பேரணிக்குத் தடை விதித்து நீதிமன்றம் வழங்கிய கட் 19

## பெரும்பான்மை அரசாங்கங்கள் கயிறு கொடுப்பதில் மன்னர்கள்

**இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் விக்னேஸ்வரன்**



கொழும்பு, பெப்.9

சிங்கள அரசாங்கங்கள் கயிறு கொடுப்பதில் மன்னாதிமன்னர்கள். அதை இந்தியா 19

## மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மோசம்!

*மனித உரிமை கண்காணிப்பகம் காட்டம்*

கொழும்பு, பெப்.9

இலங்கையில் மனித உரிமை மீறல் மீண்டும் மோசமடைகின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் அமைப்பின் கனடாவுக்கான இயக்குநர் பரீடா டெய்வ் தெரிவித்துள்ளார். 19



## வீடு புகுந்து கொள்ளையிட்ட தாலிக்கொடி மலக்குழியில்!

*கோண்டாவிலில் மூவர் சிக்கினர்*

கொடிகாமம், பெப். 9

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் வீடுபுகுந்து கொள்ளையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் மூவர், சம்பவம் இடம்பெற்று 24 மணித்தியாலங்களில் கைதுசெய்யப்பட்டனர். கொள்ளையடிக்கப்பட்ட தாலிக்கொடியும் யாழ்ப்பாண மாவட்ட 19

## இலங்கையை இழிவுபடுத்த சில குழுக்கள் முயற்சியாம்

**ரவிநாத் ஆரியசிங்க கண்டுபிடிப்பு**

கொழும்பு, பெப்.9

இலங்கையையும் அதன் தலைமையையும் இழிவுபடுத்தும் சில குழுக்களின் முயற்சிகளில் ஏமாற வேண்டாம் என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் 17

## புலம்பெயர் தமிழர் பணத்தில் வடக்கு, கிழக்கில் போராட்டம்

*இராணுவத் தளபதி கூறுகிறார்*

கொழும்பு, பெப்.9

புலம் பெயர் தமிழர்களிடம் இருந்து பணம் பெற்றே வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இவ்வாறான போராட்டங்கள் 17

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் இ.க்க்கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜெனிவாச் சமரை எவ்வாறு எதிர்கொள்வது?

## ஜனாதிபதி கோத்தா அவசர மந்திராலோசனை

கொழும்பு, பெப். 9

ஜெனிவா இராஜதந்திரச் சமரை- சவாலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும், வெளிவிவகாரம் தொடர்பான அரச அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இலங்கை தொடர்பான புதிய பிரேரணை 23 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்துக்கான இணை அனுசரணையை விலக்கிக்கொண்டுள்ள இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது அறிக்கையையும் நிராகரித்துள்ளது. இதனால் கடும் இராஜதந்திர நெருக்கடி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜெனிவா விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது. (த44)

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்குக!

கொழும்பு, பெப். 9

ஏப்ரல் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் கூடியது. இதன்போதே ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் சபாநாயகரிடம் மேற்படி வலியுறுத்தலை விடுத்துள்ளன.

அத்துடன், குறித்த அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு நாளொன்று ஒதுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன.

பெப்ரவரி மாதத்துக்கான முதல் வார நாடாளுமன்ற அமர்வு இன்று ஆரம்பமாகின்றது. அந்தத்தொடரில் குறித்த அறிக்கையைச் சமர்ப்பிக்கமுடியாது என ஆளுங்கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்த கூட்டத்தொடரிலாவது நாடாளுமன்றத்தில் அறிக்கையை முன்வைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (த44)

## வீட்டு வளவைத் தாண்டி வீதிக்கு நாய்கள் வரக்கூடாது

கொடிகாமம், பெப். 9

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை வீட்டு வளவினுள்ளேயே கட்டி வளர்க்குமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

வீட்டு நாய்களை அவிழ்த்துவிட்டு, வீதியால் பயணிப்பவர்களுக்கு ஏதேனும் இடர்கள் நிகழுமாயின் உரிமையாளர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக நாய்கள் வளர்ப்பவர்கள் அவற்றை இயக்கச்சியில் அல்லது அரியாலையில் அமைந்துள்ள கைவிடப்பட்ட நாய்களுக்கான காப்பகங்களில், ஊசி ஏற்றிய அட்டையுடன் ஒப்படைக்கலாம் என்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (த159)

## எல்லை வரையறை தொடர்பில் மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், பெப். 9

மன்னார் மாவட்டத்தில் மாந்தை வடக்குக்கு புதிய பிரதேச செயலகப் பிரிவொன்றை அமைக்கும் திட்டம் உள்ள நிலையில், அதற்கான எல்லைகளை எந்தப் பகுதிகள் ஊடாக வரையறை செய்வது என்பது பற்றிய கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன் மற்றும் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல், பிரதேச செயலர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் பதவிநிலை அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த213)

## விபத்தில் காயம்

சாவகச்சேரி, பெப். 9

அறுவடை இயந்திரத்தை ஏற்றிவந்த உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் மட்டுவிலில் நேற்று இடம்பெற்றது.

காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த9,159)

## தெல்லிப்பழை ப.தெ.வ. கூ சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. அதில், தலைவர் கணேசன், உபதலைவர் பா.விஜயகுலசிங்கம், செயலாளர் வ. சிவராஜா மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக ச.தயானி, பொ. இன்பசகரன், இ.கனிஷ்கரன், செ.நிருசன், பா.பத்மநாதன், செ.ரவிந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (த63)

## மாணவ ஆலோசனை ஆசிரியர்: நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 9

வடமேல் மாகாண மாணவர் ஆலோசனை ஆசிரியர் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட தமக்கு நியமனங்களை இழுத்தடிப்புச் செய்யாமல் உடனடியாக வழங்குமாறுகோரி வடமேல் மாகாணசபை அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

2018 ஆம் ஆண்டு ஜுலை 26ஆம் திகதி தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலை மாணவர் ஆலோசனை பணிகளுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியிருந்தது.

அவை மாகாண ரீதியாக வடமேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண பாடசாலைகளுக்காக கோரப்பட்டன.

இதனடிப்படையில் 2018 நவம்பர் 25 ஆம் திகதி விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடைபெற்றது. இதில் தெரிவாகியவர்களுக்கு நேர்முகப் பரீட்சை 2019 மே 31 ஆம் திகதியில் இருந்து ஜுன் 10 ஆம் திகதி வரை பத்தரமுல்ல, இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் நடைபெற்றது.

அதன்பின் குறித்த இரு தேர்விலும் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பிரயோக பரீட்சை கடந்த வருடம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதன் இறுதிப் பெறுபேறுகள் 2020 மார்ச் 12ஆம் திகதி பரீட்சை திணைக்களத்தின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டன. பின்னர் நீக்கப்பட்டு திருத்தங்களுடன் 2020 செப்டம்பர் 8ஆம் திகதி மீண்டும் பெறுபேறுகள் வெளியாகின.

இதன்படி தெரிவுசெய்யப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கான மாணவ ஆலோசனை ஆசிரியர்களுக்கான நியமனங்கள் கடந்த ஜனவரி 4 ஆம் திகதி வழங்கப்பட்டன. எனினும், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாண பாடசாலைகளுக்கான நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவான மாணவ ஆலோசனை ஆசிரியர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கல்வி அமைச்சில் தாம் தொடர்புகொண்டு கேட்டபோது தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களின் விவரங்கள் குறித்த மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இது தொடர்பாக வடமேல் மாகாண சபையிடம் கேட்டபோது. இது தொடர்பான தெளிவான விவரங்கள் தமக்கு இதுவரை கல்வி அமைச்சால் வழங்கப்படவில்லை. அதனால் இந்த நியமனத்தை வழங்குவதில் சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறுகின்றனர். ஏக காலத்தில் தம்மோடு தேர்வுகளில் பங்குபற்றிய தேசிய பாடசாலைகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டபோதும் தமக்கான நியமனங்களை வழங்காது காலதாமதப்படுத்துவது தமக்கு வேதனை அளிக்கின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர். (த.இ)

## இலங்கை நாடாளுமன்றில் பாக்.பிரதமர் உரை

கொழும்பு, பெப். 9

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பு வரும் அவர், 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார். பாகிஸ்தானால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தனது முதலாவது இலங்கைப் பயணத்தின் போது இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியும் நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த44)

## கிளிநொச்சி ஆடை தொழிற்சாலையில் இருவருக்குக் கொரோனா

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் இரண்டு ஆடைத்தொழிற்சாலைகளில் ஒன்றில், இருவருக்கு கொரோனாத்தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. நுவரெலியாவைச் சேர்ந்த இருவருக்கே நேற்றுமுன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்றும் அவர்கள் தமது ஊருக்குச் சென்றுவந்திருந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு பணிபுரியும் சுமார் 90 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதும் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று சுகாதாரத்தரப்பினர் நேற்றுத் தெரிவித்தனர். (த6)

## நாள் சம்பளம் ரூ.1,000 13 நாள்களே வேலை!

### சம்பள நிர்ணய சபையில் நிபந்தனையுடன் தீர்மானம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
அதற்கமைய நாளாந்த அடிப்படை சம்பளமாக 900 ரூபாவும், மேலதிக கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை, 1000 ரூபா நாளாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. எனினும், மாதத்தில் 13 நாள்கள் மாத்திரமே வேலை வழங்கப்படுமென்ற கடுமையான நிபந்தனையையும் முன்வைத்துள்ளன.
அடுத்த 14 நாள்கள் ஆட்சேபனை காலம் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்குள் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளையும், மறுப்புகளையும் முன்வைக்க கால அவகாசம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
(த.இ)

# 20க்கு முன்னர் கொடுப்பனவு வேண்டும் தவறின் மார்ச்சிலிருந்து போராட்டம்தான்

### ஆசிரிய, அதிபர் சங்கங்கள் ஒருமித்துத் தீர்மானம்

**கொழும்பு, பெப். 9**
**அரசு வாக்குறுதியளித்ததன் பிரகாரம் ஆசிரியர்களின் சம்பளத்துடன் இடைக்கால கொடுப்பனவை எதிர்வரும் 20 ஆம் திகதி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இல்லாவிட்டால், மார்ச் மாதத்தில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொள்ள அனைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சங்கங்கள் தீர்மானித்துள்ளன என்று ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்ணாந்து தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆசிரியர்களின் இடைக்காலக் கொடுப்பனவு தொடர்பாக 1997ஆம் ஆண்டிலிருந்து ஏற்படுத்தப்பட்ட இந்த அநியாயம் தொடர்பாக பல்வேறு சந்தப்பங்களில் அரசுகள் பொய் வாக்குறுதிகளை வழங்கியிருந்தன.
தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர், சமர்ப்பிக்கப்படும் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் இதற்குத் தீர்வு பெற்றுத்தரப்படும் என வாக்குறுதியளித்து அரசு வாக்குகளை பெற்றுக்கொண்டது.
அத்துடன், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படும்வரை ஜனவரியிலிருந்து இடைக்காலக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவோம் என்று அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் போன்றவர்கள் நாடாளுமன்றில் வாக்குறுதியளித்திருந்தனர். அது ஏமாற்றமாகும். கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக நாங்கள் இதுதொடர்பாக மௌனம் காத்தோம். என்றாலும், இதன் பிறகும் ஆசிரியர்களை ஏமாற்றுவதற்கு அரசுக்கு இடமளிக்கமாட்டோம்.
தொடர்ந்து ஏமாறுவதற்கு ஆசிரியர்கள் தயாரும் இல்லை. அதனால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுக்கு எதிர்வரும் 20ஆம் திகதிவரை காலக்கெடு வழங்குவதற்கு ஆசிரியர் சங்கங்கள் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றன.
இதன் ஆரம்ப நடவடிக்கையாக இந்த மாதத்திலிருந்து மாவட்ட மட்டத்தில் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்க இருக்கின்றோம். அதன் முதலாவது ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி அனுராதபுரத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றோம். என்றார். (த.இ)

## வன்னியில் 336 குளங்களை சீரமைக்க ரூ.2,500 மில்லியன்

### காதர் மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா,பெப்.9
வன்னி மாவட்டத்தில் தூர்ந்துபோயுள்ள 336 குளங்களைச் சீரமைக்க அரசால் 2ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.
நீர்ப்பாசன அமைச்சு, விவசாய அமைச்சு என்பன இணைந்து மத்தி மற்றும் மாகாண திணைக்களம் என்பனவற்றின் பங்களிப்புகளுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 100 குளங்களுக்காக 125 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் 158 குளங்களுக்காக 160 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 குளங்களுக்காக 100 மில்லியன் ரூபாவும் அவசரமாக ஏற்படுகின்ற தேவைகளுக்காக 100 மில்லியன் ரூபாவும் இந்த வருடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டத்துக்கு மேலும் 300 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 250 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 150 மில்லியன் ரூபாவும் மேலதிகமாக ஒதுக்கப்படவுள்ளன. - என்று அவர் மேலும் தெரிவித்தார்.
(த110)

# புதிய அமைச்சரவைப் பத்திரம் தோட்ட மக்களை நாசமாக்கும்

### வேலுகுமார் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, பெப். 9
லயன் என்ற கட்டமைப்புக்குள்தான் பெருந்தோட்ட மக்கள் வாழ வேண்டும். அவர்கள் வாழும் பகுதிக்கு 'கிராமம்' என்ற அங்கீகாரத்தை வழங்கக்கூடாது என்பதே இந்த அரசின் நோக்கமாகும். அதற்கேற்ற வகையிலேயே புதிய அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் அது எமது மக்களை மீண்டும் இருண்ட யுகத்துக்கே அழைத்துச் செல்லும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிதிச்செயலாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தோட்ட வீடமைப்பு முறைமையைத் திருத்தம் செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தப் பத்திரத்தில் நயவஞ்சகமான ஏற்பாடுகள் இருந்தாலும், அதுபற்றி கதைக்காமல், '10 பேர்ச்சஸ் காணி' என்ற ஒன்றை மட்டும் தூக்கிப்பிடித்து, ஆளுங்கட்சிக்குக் காவடி தூக்கும் நடவடிக்கையில் அரச பங்காளிகளும், அவர்களின் அடியாள்களும் ஈடுபட்டுள்ளனர். இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் எமது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அவர்களுக்குக் கவலையில்லை.
எமது ஆட்சியில் லயன் யுகத்துக்கு முடிவு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாதுகாப்பான இடங்களில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டன. தோட்டங்கள் கிராமங்களாக பரிணாமம் பெற்றன. அதுமட்டுமல்ல வீடு கட்டுவதற்கு வழங்கப்பட்ட காணிக்கு அப்பால் தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் வீதம் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வந்தன.
தற்போது உள்ள லயன்கள் இடிக்கப்பட்டு அங்குதான் வீடுகள் அமைக்கப்பட வேண்டுமாம். ஒரு லயன் அறை கட்டுவதற்கு ஒரு பேர்ச்சஸ் காணிகூட இல்லை. எனவே, லயன்களை இடித்துக் கட்டினால் எப்படி 10 பேர்ச்சஸ் என்பது எல்லோருக்கும் சாத்தியமாகும்?
அதேபோல், லயன் என்ற கட்டமைப்புக்குள் இடைவெளியின்மை, வீதி வசதி இன்மை என பல பிரச்சினைகள் இருந்தன. ஆக தனி வீடுகள் அமைக்கப்பட்டாலும் அதே பிரச்சினைகள் தொடரும் வகையில்தான் திட்டம் அமைந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சுயதொழிலை ஊக்குவிப்பதற்கும், அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கும் தலா 2 ஏக்கர் வீதம் வழங்குவதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தற்போது அவையும் இல்லாமல்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்கு 7 பேர்ச்சஸ் காணி, எஞ்சிய 3 பேர்ச்சஸ் காணியில் சுயதொழில் என அறிவித்துள்ளதன் மூலம் குறுகிய வட்டத்துக்குள் மக்களை சிறை வைப்பதற்கு வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.
அரசின் இந்த நயவஞ்சகத் திட்டம் தெரியாமல், ஏதோ வரலாற்றை மாற்றியமைத்துவிட்டதுபோல் சிலர் வீராப்புப் பேசுகின்றனர். இருந்ததும், இல்லாமல் போகச் செய்யப்படுகின்றது என்பதே கசப்பான உண்மையாகும். என்றார். (த.இ)

### தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு

# 4 வீத வட்டியில் ரூ.3 லட்சம் கடன்

கொழும்பு, பெப். 9
தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு 4 சதவீத வட்டி அடிப்படையில் 3 லட்சம் ரூபா கடனுதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
பேச்சு ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அதனை விடுத்து பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதால் எவ்வித பயனும் எவருக்கும் கிடைக்காது என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.
பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் தனியார் பஸ் உரிமையாளர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும். இதுவரையில் முன்வைத்த கோரிக்கைகள் இயலுமானவரை நிறைவேற்றப்பட்டுள்ளன. 4 வீத வட்டி அடிப்படையில் 3 லட்சம் கடனை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
ரயில் சேவையில் அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். சேவை வெற்றிடம் குறித்து ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று கூறியுள்ளனர். இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அனைத்து தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.
பிரதான நகரங்களில் உள்ள வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ரயில் நிலையப் போக்குவரத்து சேவையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை தொடக்கம் அவிசாவளை வரையான களனி வழி ரயில் பாதையில் ரயில் சேவையை அதிகரிக்க புதிய திட்டம் செயற்படுத்தப்படும். ரயில் சேவையை அதிக இலாபமீட்டும் துறையாக அபிவிருத்தி செய்வது போக்குவரத்து அமைச்சின் பிரதான இலக்காகும். - என்றார். (த-இ)

# உண்மையை ஏற்றுக்கொண்டாலே மாற்றுத்திட்டங்களை ஆராயலாம்

*பொருளாதார நெருக்கடிக்குள் நாடு என்கிறார் ஹர்ஷ டி சில்வா*



**கொழும்பு, பெப்.9**

**நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன்மூலமாகவே மாற்றுத்திட்டங்களை ஆராயமுடியும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அந்நியச் செலாவணியில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட 400 மில்லியன் ரூபாவை விரைவாக மீளச் செலுத்த வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டதாலேயே அரசாங்கம் அதனை செலுத்தி இருக்கின்றது. ஆனால் இந்தியாவுக்கு செலுத்தவேண்டிய காலத்திலேயே இதனை செலுத்தினோம் என அரசாங்கம் தெரிவிக்கின்றது. அரசாங்கத்திடம் முறையான கொள்கை ஒன்று இல்லாததன் காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டிருந்தால், இந்தியாவுக்குச் செலுத்தவேண்டி இருந்த 400 மில்லியன் ரூபாவை செலுத்துவதற்கு இன்னமும் கால அவகாசம் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது.

நாட்டின் அந்நியச் செலாவணி பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஆரம்பமாக நாங்கள் நாட்டில் மிகப்பெரும் நிதிப் பிரச்சினை இருப்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதன் பிறகு. அதனைத் தீர்த்துக்கொள்ளத் தேவையான மாற்று வேலைத்திட்டங்களை வகுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டும். இந்தியாவுக்கு செலுத்த வேண்டி இருந்த 400 மில்லியன் ரூபா சிறிய விடயம். ஏனெனில் நாங்கள் இந்த வருடத்துக்குள் 6 ஆயிரம் டொலர் மில்லியன் கடனை செலுத்த வேண்டி இருக்கின்றது. அதனை எப்படிச் செலுத்துவதென்பதுதான் பிரதான பிரச்சினை. அதற்கான மாற்று வேலைத்திட்டங்களை அமைத்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ந-இ)

## ஐக்கிய மக்கள் சக்தியின் முதல் மாநாடு 6ஆம் திகதி

கொழும்பு, பெப். 9

ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பின் பிரகாரம் முதலாவது வருடாந்த மாநாடு எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னர் கட்சியின் அனைத்து கட்டமைப்புகளும் கட்டியெழுப்பப்படும் எனவும், கூட்டணிகூட உருவாக்கப்பட்டுவிடும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மாநாட்டின்போதே சம்பிக்க ரணவக்க உட்பட ஹெல உறுமய உறுப்பினர்கள் 21 பேர் கட்சியில் அதிகாரபூர்வமாக இணைவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

சம்பிக்க ரணவக்கவுக்கான பதவி குறித்து ஐக்கிய மக்கள் சக்திக்குள் தற்போது முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. கட்சி மாநாட்டுக்கு முன்னர் அந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-44)

## 103 வயது மூதாட்டி கொரோனாவுக்குப் பலி

கொழும்பு.பெப்.9

103 வயதுடைய பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால், உயிரிழந்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த அதிக வயதுடையவர் இவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலி கிரிமங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் கடந்த 6 ஆம் திகதி அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

பின்னர் அவரது சடலம் கராப்பிட்டிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு சடலம் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, அவர் கோவிட் தொற்றுக்குள்ளாகி இருந்தமை தெரியவந்தது என்று காலி மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரியந்த டி சில்வா தெரிவித்தார். (க-இ)

## பௌத்த மதத்துறவிகளின் பெற்றோருக்கு வீடமைப்பு

*பிரதமர் மஹிந்த தெரிவிப்பு*



கொழும்பு, பெப்.9

'மிஹிந்து நிவஹன திட்டம்' பௌத்த துறவிகளின் பெற்றோருக்கு மாத்திரமன்றி முழு சாசனத்துக்கும் நிழல் தரும் ஒரு திட்டமாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று தெரிவித்தார்.

சியம்பலாண்டுவ புத்தம புரான ரஜமஹா விகாரையில் நடைபெற்ற 'மிஹிந்து நிவஹன திட்டத்தின்' ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்காக தமது குழந்தைகளை சாசனத்துக்கு தியாகம் செய்த பெற்றோரின் நினைவாக, இந்த 'மிஹிந்து நிவஹன திட்டம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் சகவாழ்வை 30 ஆண்டுகளாக அழித்த பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவித்து நாட்டில் அமைதியை நிலைநாட்டியுள்ளோம். அத்துடன் அபிவிருத்தியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் எத்தனை சிரமங்களை எதிர்கொண்டாலும் நாட்டின் சுதந்திரத்துக்காக தைரியமான முடிவுகளை எடுக்கும்.

எனவே, நாட்டை நேசிக்கும் துறவிகள், மதத் தலைவர்கள் மற்றும் அனைத்து மக்களும் இந்த அரசாங்கத்தில் எங்களுடன் நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் ஆதரவு மற்றும் புரிதலுடன் மட்டுமே நாங்கள் முன்னோக்கி நகர முடியும். மக்கள் எங்களை நம்பி எங்களுக்கு அதிகாரம் கொடுத்தார்கள். நாங்கள் மக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்து நாட்டைப் பாதுகாப்போம் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்' என அவர் தெரிவித்தார். (ச-இ)

## பாடசாலை மட்டத்தில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்பு குழு

*பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 9

பாடசாலை மட்டத்தில் இருந்து பொது மக்கள் பாதுகாப்புக் குழு அமைக்கப்படவுள்ளது. இது பாதுகாப்பான சூழலை உருவாக்க எடுத்துள்ள சிறந்த தீர்மானமாகும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு குழு அங்குரார்ப்பணம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்காகவே பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அச்சமின்றி பாதுகாப்பாக வாழும் சூழலை ஏற்படுத்துவது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் முதன்மை இலக்காகும்.

தேசிய பாதுகாப்பில் நாட்டு மக்கள் அனைவரும் பங்குபற்ற வேண்டும் என்பதற்காகவே 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்கும் இராணுவப் பயிற்சியை வழங்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தேன்.

நாடளாவிய ரீதியில் 44 தொகுதிகளில் பொதுமக்கள் பாதுகாப்பு குழு சேவையாற்றும். 117,118 என்ற அவசர தொலை பேசி இலக்கத்துக்கு அழைத்து பொது மக்கள் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் - என்றார். (ஐ-இ)

## ஹிந்தகல லென் விகாரையை புனரமைக்க பிரதமர் உத்தரவு

அநுராதபுரம், பெப். 9

வரலாற்றுச் சிறப்புமிக்க ஹிந்தகல லென் விகாரையை உடனடியாக புனரமைக்குமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். அனுராதபுரம், கம்பளை, கண்டி மற்றும் கொழும்பு ஆகிய நான்கு யுகங்களுக்குரிய ஓவியங்களைக் கொண்ட இந்த விகாரை தற்போது அழிவடையும் நிலையில் உள்ளது. இந்த விடயம் தொடர்பில் தேசிய நாளிதழ் ஒன்றில் வெளியாகிய செய்தியை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## ஒருமைப்பாடு நல்லிணக்க குழுவின் உறுப்பினராக செந்தில் தொண்டமான்!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய, நாட்டின் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க குழுவின் உறுப்பினர்களுக்கான நியமனங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த விசேட குழுவை நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி நியமித்துள்ளார்.

இவ் அதி உயர் குழுவில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக உள்வாங்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமானுக்கான நியமனத்தை நீதி அமைச்சர் அலி சப்ரி வழங்கியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில், தேசிய ஒருமைப்பாட்டையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவது அதிமுக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

பல்லினச் சமூகங்களைக் கொண்ட மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால், தேசிய நல்லிணக்கமும், தேசிய ஒருமைப்பாடுமே அந்த நாடுகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றுள்ளன. இதற்கமையவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தக் குழுவை நியமிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆலாய்ப்பறத்தலும் ஆறப்போடுதலும்

யாழ்ப்பாணம், வேலணையைச் சேர்ந்த முதியவரை நேற்றுக் காவு வாங்கியிருக்கிறது கொரோனா. இந்தச் சாவின் மூலம் மீண்டும் வடக்கு மக்களிடையே கொரோனா பற்றிய அச்சக் கனவுகள் தலைதூக்கியிருக்கின்றன. அதனால் மீண்டும் அடுத்த சில நாள்களுக்கு கொரோனா பற்றிய விழிப்புணர்வுகள் பரபரப்பாகத் தலைதூக்கக்கூடும். ஆனால் கழுதை தேய்ந்து கட்டெறும்பாவதைப் போல, மெல்ல மெல்ல அந்த விழிப்புணர்வு மங்கிப் போக, இன்னொரு புறத்தில் கொரோனா தன் வேலையைக் காட்டும். பின்னர் தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்தவர்களைப் போல சுகாதாரத்துறையினர் 'சுகாதார நடைமுறைகள், விழிப்புணர்வு' என்று ஆலாய்ப்பறந்துவிட்டு, ஓய்ந்துவிடுவார்கள். இதுதான் இனி முடிவற்று, ஒரு சங்கிலித் தொடராக நீளப்போகின்றது.

வேலணையில் இறந்தவர் முதலில் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்றுவிட்டு குணமாகாத நிலையில், யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். சுவாசம் சம்பந்தப்பட்ட நோயால் அவர் பாதிக்கப்பட்டிருந்தபோதும் அந்தத் தனியார் மருத்துவமனையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. சாதாரணமாக சளி, காய்ச்சல் என்று நோயாளர்கள் வந்தாலே பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் காலத்தில், எப்படி இந்த நோயாளியின் விடயத்தில் அந்த மருத்துவமனை அலட்சியப்போக்குடன் நடந்துகொண்டது? அங்கு பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அந்த முதியவருக்கு தொற்றியிருப்பது கொரோனா என்பது கண்டறியப்பட்டு, உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்தால் அவர் காப்பாற்றப்பட்டிருப்பார். ஆனால் அவர் யாழ்ப்பாணம் வந்த பின்னரே அவருக்கு கொரோனா தொற்றொயிருப்பது கண்டறியப்பட்டு அனுராதபுரத்துக்கு சிகிச்சைக்கென அனுப்பப்பட்டிருக்கிறார். அதற்கிடையில் கொரோனா அவர் உடலில் வீரியமாகப் பரவிவிட்டதால், யாழ்ப்பாணத்தின் முதல் கொரோனாச் சாவாக அவரது மரணம் பதிவாகி அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.


சுகாதாரத்துறையும், அரசாங்கமும் கொரோனாவை முற்றாக மறந்து விட்டது போலவே இப்பொதெல்லாம் நடந்துகொள்கின்றன. அதனாலேயே வேலணை வயோதிபரைப் போன்ற பலர் கொரோனாவால் உயிரிழக்க வேண்டியிருக்கிறது.

வெளிமாவட்டங்களில் இருந்து வருவோர் கொரோனாவைக் கொண்டுவந்துவிடக் கூடாது என்ற நோக்கத்துக்காக எழுதுமட்டுவாழில், வாகனச் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் மூலம் தென்னிலங்கையில் இருந்து வாகனங்களோடு வந்த சாரதிகள் சிலர் கொரோனாவால் பீடிக்கப்பட்டநிலையில் கண்டறியப்பட்டு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தனர். இதன் மூலம் புதிய கொரோனாக் கொத்தணிகள் உருவாவது தவிர்க்கப்பட்டிருந்தது. ஆனால் சில நாள்களுக்கு முன்னர் இந்தப் பரிசோதனைகள் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென நிறுத்தப்பட்டு விட்டன.

ஏன் அந்தப் பரிசோதனை நிறுத்தப்பட்டது என்பதற்கு எவ்வித விளக்கங்களும் சொல்லப்படவும் இல்லை. ஒருவேளை கொரோனா முற்றாக இலங்கையில் இல்லை என்று கனவேதும் கண்டுவிட்டு அதனை நிறுத்தினார்களோ தெரியவில்லை. பல்லாயிரக்கணக்கானோருக்கு கொரோனா தொற்றிய பின்னும், ஏராளமான கொத்தணிகள் தோன்றிய பின்னும், நூற்றுக்கணக்கில் சாவுகள் விழுந்த பின்னும், 'சமூகத் தொற்று இலங்கையில் இல்லவே இல்லை' என்று சொல்லும் சுகாதாரத்துறைக்கு 'இலங்கையில் கொரோனாவே இல்லை' என்று சொல்வதொன்றும் பெரிய வேலையில்லை.

அதிகளவான தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் அல்லது கொரோனாச் சாவுகள் நிகழ்ந்ததும் 'சுடுகுது மடியைப் பிடி' என்று ஆர்முடுகப்பட்ட பொம்மைகளாகப் பரபரக்கும் சுகாதாரத்துறை, ஏனைய நாள்களிலும் அந்தப் பதகளிப்பின் அரைவாசியையேனும் காட்டினால் , கொரோனாவை இன்னும் சுலபமாகக் கட்டுப்படுத்தமுடியும். ஆனால் நடக்கின்றவையைப் பார்க்கும்போது அவையெல்லாம் எட்டாக்கனியாகவே தெரிகின்றன. இப்போதைக்கு அவரவர் தம்மையும், குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்வதே ஒரே வழி.

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கத் தயார்!

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.9**

**இலங்கையில் நிலவும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார பிரச்சினைகள் காரணமாக பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவர் ரோஹண லக்ஷமன் பியதாச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த தேர்தல் காலங்களில் இந்த அரசாங்கம் மீது பொதுமக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தற்போது இல்லாது போய்விட்டது. அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளின் காரணமாக தற்போது விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தொடங்கியுள்ளனர்.

எனவே அரசாங்கம் இவ்வாறு தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளதால், மக்களின் போராட்டத்துக்கு முன்னின்று செயற்படவும் ஆதரவு வழங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவுள்ளது.
மேலும் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை - என்றார். (ற-இ)

## கைது 3,042



கொழும்பு,பெப்.9
முகக்கவசம் அணியாமை மற்றும் தனிநபர் இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்க ளின் கீழ் இதுவரை 3 ஆயிரத்து 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். பாடசாலை சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளில் எழுமாறாக அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. இதேபோன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தனிமைப்படுத்தல் விதிகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்கான சுற்றி வளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். மேல் மாகாணத்திலிருந்து வெளிப்பிரதேசங்களுக்குச் செல்லும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எழுமாறாக அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்படுகிறது. அத்துடன் முகக்கவசம் அணியாதோருக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## மஹிந்தானந்த வழக்கு: தீர்ப்பு எதிர்வரும் 25 இல்!

கொழும்பு, பெப்.9
இலங்கை சுதந்திர ஊழியர் காங்கிரஸ் எனப்படும் தொழிற்சங்கத்துக்கு சொந்தமான 3.9 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிரான வழக்கின் விசாரணைகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்துள்ளன. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் தனது கட்சிக்காரரை விடுவிக்குமாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் சட்டத்தரணி நீதிமன்றில் கோரியிருந்தார். இதை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்குத் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படும் என அறிவித்தார். (ற-இ)

# டெங்கு ஒழிப்புத்திட்டங்களால் மூலிகைகள் அழிக்கப்பட்டன!

## வலி. தென்மேற்கு ஒருங்கிணைப்புக் குழுவில் துறைசார் அதிகாரியால் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 9

**மூலிகைகள் அடையாளம் காணப்படுகின்ற போதிலும் டெங்கு ஒழிப்புத் திட்டங்களால் அவை அழிக்கப்படுகின்றன. எனவே டெங்கு ஒழிப்புத் திட்டங்களில் ஆயுள்வேதத் துறையினரையும் இணைத்துச் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் துறைசார் மருத்துவர்.**

வலி. தென்மேற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. 'பிரதேசத்தில் உள்ள மூலிகைச் செடிகளை இனங்காண்பது' தொடர்பான விவாதத்தின்போதே துறைசார் மருத்துவரால் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மூலிகைச் செடிகள் இனங்காணப்படவில்லை என்று கூறமுடியாது. நாம் அவற்றை இனங்காண்கின்றோம். அடையாளப்படுத்திவிட்டு பின்னர் கள ஆய்வுக்காக எமது குழுவினருடன் நாம் செல்லும் போது அவை அழிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

எனவே டெங்கு ஒழிப்புத் திட்டத்தில் எமது ஆலோசனைகளையும் பெற்றுச் செயற்படும் பட்சத்தில் மூலிகைச் செடிகளைக் காப்பாற்றலாம். அத்துடன் உரிய வேலிகள் இல்லாமையால் மூலிகைச் செடிகளை கட்டாக்காலி கால்நடைகள் மேய்ந்து விடும் சந்தப்பங்களும் அதிகம் உள்ளன. இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியும் உள்ளன - என்றார். (ம-319)

# மருத்துவமனைக்கான பாதைகளில் நெரிசல்

*சங்கானையில் இந்த நிலை*

யாழ்ப்பாணம், பெப். 9

சங்கானை பிரதேச மருத்துவமனைக்குச் செல்லும் பாதைகளில் கனரக வாகனங்களும் இதர வாகனங்களும் நிறுத்தப்பட்டு வாகன நெரிசல் ஏற்படுத்தப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டது.

ஒரு நாளின் பெரும்பாலான நேரங்களில் அதிக அளவான வாகனங்கள் சங்கானை பிரதேச மருத்துவமனைக்குள் நுழைவதற்கான நான்கு பாதைகளிலும் நிறுத்தப்படுவதால் நோயாளர் காவுவண்டிகள் பயணிப்பதிலும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. (ம-319)

# பாணாவெட்டி மருத்துவமனை தரமுயர்த்தி தரப்படவேண்டும்

*அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், பெப். 9

சுழிபுரம் பாணாவெட்டி மருத்துவமனையை தரம் உயர்த்தித் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

சுழிபுரம் பாணாவெட்டி மருத்துவமனை ஆரம்ப சுகாதார மருத்துவமனையாகவே தொடர்ந்து இயங்கி வருகின்றது. இதைத் தரம் உயர்த்தித் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக நோயாளர் காவு வண்டிக்கான தேவை அங்குள்ளது - என்றனர்.

'ஒரு மருத்துவமனையைத் தரமுயர்த்துவதென்பது சில தேவைப்பாடுகள் மற்றும் வசதிகளை அடிப்படையாகக் கொண்ட விடயமாகும். எனவே உரிய பொறிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு தரமுயர்த்தப்பட வேண்டிய நிலையில் இருப்பின் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் பதில் வழங்கினார். (ம-319)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் திடீர் அதிகரிப்பு

*விலைக்குறைப்பின் பெயரில் ஏமாற்றும் அரசு*

யாழ்ப்பாணம், பெப்.9

அரச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஊடாக குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்ட சில பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

85 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் விலை 99 ரூபாவாகவும், கோதுமை மா 82ரூபாவிலிருந்து 84 ரூபாவாகவும், பெரிய வெங்காயம் கிலோ 75 ரூபாவிலிருந்து 120 ரூபாவாகவும், 1 கிலோ கீரி சம்பா 120 ரூபாவிலிருந்து 125 ரூபாவாகவும் 1 கிலோ கொண்டல் கடலை 155 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

27 அத்தியாவசியப் பொருள்கள் விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளன என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளன என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-25)

# இந்து மயானத்துக்குள் கலாசாரச் சீரழிவுகள்!

## 'சி.சி.ரி.வி.' வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 9

சங்கானை கரைச்சி இந்து மயான சுற்றாடலில் கலாசாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. எனவே அவற்றை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடப்பட்டது. வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் துவாரகாவும் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்.

அண்மையில் இடம்பெற்ற குறித்த பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் துவாரகா மேலும் தெரிவித்ததாவது:


சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்குள் கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட வேண்டும். அங்கு கசிப்பு உற்பத்திகளும், இன்னும் இதர கலாசார சீர்கேடுகளும் இடம்பெறுகின்றன. இதைத் தடுக்க முன்வர வேண்டும் - என்றார்.

இதற்குப் பதில் வழங்கிய மேலதிக மாவட்டச் செயலர் பிரதீபன், மயானம் என்பது ஒரு புனிதமான இடம். அங்கும் கமராக்கள் பொருத்த வேண்டிய தேவையுள்ளது என்பது வருத்தத்துக்கு உரியது - என்றார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸார், கசிப்பு உற்பத்திகள் தற்போது அங்கு இடம்பெறுவதில்லை. ஆனால், கசிப்பை அங்குவைத்து அருந்துகின்றனர் என்று முறைப்பாடுகள் வந்துள்ளன. இதை முழுவதுமாகக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றனர். (ம-319)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1927 ★ 04 ★ 18 | 2021 ★ 02 ★ 08 |



## நமசிவாயம் பாலசிங்கம்

ஞானியார்வளவு, இரும்புமதவடி, கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது புலோலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான நமசிவாயம் பாலசிங்கம் நேற்று 08.02.2021 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற நமசியவாயம் சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாறுவதியின் அன்புக் கணவரும், சீராளனின் பாசமிகு தந்தையும், சங்கீதாவின் அன்பு மாமனாரும், துஷாந்தின் அப்பப்பாவும், இராஜேந்திரா (கனடா- இளைப்பாறிய தபால் அதிபர்), காலஞ்சென்ற நடராஜா (நில அளவையாளர்), தையல்நாயகி (இலங்கை), செல்வசோதி (கனடா -யோகா மாஸ்டர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.02.2021 காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வதிவிட முகவரி:**
மாவில் ஒழுங்கை
புலோலி கிழக்கு, புலோலி.

**தகவல்:**
குடும்பத்தினர்.


## மின் அத்தியட்சகர்கள் இடமாற்றம்

சாவகச்சேரி, பெப்.9

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் மின் அத்தியட்சகராகக் கடமையாற்றிய ச. இராகுலன் பருத்தித்துறை வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்கு நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு பருத்தித்துறை நிலையத்தில் கடமையாற்றிய எஸ். கமலகோபன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (பு-9.159)

# காலாதிகாலமான முரண்பாடுகளை பேரணியுடன் தொடர்புபடுத்தாதீர்

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை



கல்முனை, பெப். 9

**தமிழர் தரப்பில் அவர்கள் சார்ந்த கோரிக்கைகள் தனியாகவும், முஸ்லிம்களின் கோரிக்கைகள் தனியாகவும் இருப்பதென்பது புவியியல் ரீதியாக இருந்துகொண்டுதான் வருகிறது. காலாதிகாலமாக இருக்கும் இந்த முரண்பாடுகளை இந்தப் பேரணியுடன் முடிச்சுப்போட்டு எங்களின் ஒற்றுமைக்குக் களங்கம் ஏற்படுத்தக்கூடாது. இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

கல்முனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழர் தரப்பில் அவர்கள் சார்ந்த கோரிக்கைகள் தனியாகவும், முஸ்லிம்களின் கோரிக்கைகள் தனியாகவும் இருப்பதென்பது புவியியல் ரீதியாக இருந்துகொண்டுதான் வருகிறது. காலாதிகாலமாக இருக்கும் இந்த முரண்பாடு களை இந்தப் பேரணியுடன் முடிச்சுப்போட்டு எங்களின் ஒற்றுமைக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடாது. இது வெறுமனே தமிழ் பேசும் மக்களின் போராட்டம் அல்ல. இந்த நாட்டின் சகல இன மக்களும் "நேர்மையான நியாயமான சட்டத்தின் ஆட்சி நடக்க வேண்டும். அராஜகம் இல்லாதொழிய வேண்டும்" எனக் கோரும் ஒன்றிணைந்த போராட்டம்.

தமிழ்-முஸ்லிம் மக்களின் பிரச்சினை மாத்திரமல்ல இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களின் எதிர்காலம் தொடர்பான பிரச்சினைகளும் இதில் உள்ள டங்கியுள்ளன. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கு ஆலோசனை வழங்கினேன். கலந்துகொள்ள வாய்ப்பிருந்த முன்னாள் எம்.பி ஏ.எல்.எம். நஸீர் உள்பட எல்லோரும் கலந்துகொண்டனர். ஜனாஸா விடயத்தில் இந்த அரசு விட்டுக்கொடுப்பு இல்லாமல் உள்ளது. ஜெனிவா பிரேரணையில் இவ்விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியையும் உள்ளடக்கி அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட உள்ளது. மேலும் இந்த நாட்டில் நடைபெற்ற யுத்தத்தில் தவறிழைத்த விடுதலைப் புலிகளோ அல்லது அரசாங்க படையணி அதிகாரிகளோ யாராக இருந்தாலும் யுத்தக் குற்றம் செய்திருந்தால் மாத்திரமே அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (வ-இ)



## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், பெப்.9

கருகம்பனை இந்து இளைஞர் கழகம், தமிழ் மன்ற சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்திய 14 ஆவது குருதிக் கொடை முகாம் நேற்று கருகம்பனை பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதில் 67 பேர் குருதி வழங்கி உயிர்காக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கியினர், மருத்துவர் சிவதர்சன், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் குருதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர். (ற-222)

## சிறப்புச் சொற்பொழிவுகள்!

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் "அபிராமி பட்டர் "குரு பூசையை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. ஆலய பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் காலை 11.30 மணிக்கு இச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

திருவருள்வாசகர் சைவப்புலவர் கா. கமலநாதனால் "தமனியக் காவினில் தங்குவரே " என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்படவுள்ளது. (ற)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சொற்பொழிவு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் செ.பாலசந்திரனால் முன்னெடுக்கப்படவுள்ளது. "சைவசமயப் பொக்கிஷங்கள் நிலைக்கப் புராணபடலம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)



## பிரிவுபசார நிகழ்வு

சாவகச்சேரி.பெப்.9

சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி பருத்தித்துறை மதுவரி நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற இந்திக்க பிரியசாந்தவுக்கான பிரிவுபசார நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் வரணி கொத்தணியின் ஏற்பாட்டில் வரணியில் நடைபெற்றது.

கொத்தணித் தலைவர் க.துரைசிங்கம் மதுவரி நிலையப் பொறுப்பதிகாரிக்கு பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார். (ஐ-9)

## திருவிழா ஆரம்பம்

சாவகச்சேரி, பெப்.9

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 10 தினங்கள் இடம்பெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 26ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-9)

# மருத்துவ சான்றிதழையும் உரிமத்தையும் பெறவும்

## உணவு கையாளும் நிலையத்தினருக்கு சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்து

சாவகச்சேரி, பெப். 9

தென்மராட்சி பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களை நடத்துவோர் இந்த வருடத்துக்கான மருத்துவச் சான்றிதழையும் தமது பிரிவு உள்ளூராட்சி சபையில் இந்த வருடத்துக்குரிய உரிமத்தையும் பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

உணவு கையாளும் நிலை யங்களை நடத்துவோர் மற்றும் அங்கு பணிபுரிவோர் கட்டாயம் தனிநபர் சுகாதாரம் தொடர்பான மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் மருத்துவச் சான்றிதழ் மற்றும் உரிமம் தொடர்பான படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் அறிவித்துள்ளார்.

தனிநபர் மருத்துவ சான்றிதழ் மற்றும் உள்ளூராட்சி சபையில் பெறப்பட்ட உரிமம் ஆகியவை இன்றி உணவு தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்படின் மருத்துவச் சான்றிதழ் இல்லாதவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் உள்ளூராட்சி சபையில் இந்த வருடத்துக்கான உரிமம் பெறாதவர்களின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் என்பனவும் மூடப்படும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (கு-9)

# தடுப்பூசி பெறுவதற்கு பொதுமக்கள் ஆர்வம்!

கொரோனாத் தடுப்பூசியைப் பெறுக்கொள்வதற்கு பொதுமக்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். தமக்கு எப்போது தடுப்பூசி கிடைக்கும் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இதேவேளை அடுத்தகட்டமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசிகளை வழங்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களது கிராம அலுவலரிடம் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (வ-9)

# பாதிப்புறும் தொழிலாளர்களுக்கு விசேட பாதுகாப்பு நடைமுறை

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா திட்டம்

கொழும்பு, பெப்.9

**இலங்கையில் திடீர் அனர்த்தங்களால் தொழில் வருமானத்தை இழந்தவர்களுக்கு விசேட பாதுகாப்பு நிதி வழங்கும் நடைமுறை ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.**



கொரோனாத் தொற்று போன்ற அனர்த்தங்களின்போது நாட்டை மூடி வைத்தல் அல்லது திடீர் அனர்த்தங்களால் தொழில் வருமானத்தை இழந்தவர்களுக்கு விசேட பாதுகாப்பு நிதி வழங்கும் நடைமுறை ஒன்று இந்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல வெளிநாடுகளில் அவ்வாறு தொழில் இழந்தவர்களுக்கு விசேட பாதுகாப்பு காப்புறுதி ஒன்று வழங்கப்படுகின்றது. கொரோனாத் தொற்றின் காரணமாக வருமானம் இழந்தவர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் 80 வீதம் கிடைத்துள்ளது. இந்தப் பாதுகாப்பு நிதிவழங்கும் நடைமுறையின் கீழ் அவ்வாறு விசேட காரணத்துக்கு இலங்கை மக்கள் தொழிலை இழந்தால் அவர்களது வருமானத்தில் 70-80 வீதத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் சர்வதேச தொழில் அமைப்புடன் கலந்துரையாடல் மேற்கொண்டு இலங்கைக்குப் பொருத்தமான முறை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் 35 லட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களுக்கும், நாளாந்தம் வருமானம் பெறும் 10 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு இந்தப் பாதுகாப்பு நிதி வழங்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# போலி விசாவை பயன்படுத்திய மூவர் கைது

கொழும்பு, பெப்.9

போலியான ஆவணங்களை சமர்ப்பித்துப் பெற்றுக்கொண்ட விசாவைப் பயன்படுத்தி, ஜேர்மனிக்குச் செல்ல முயற்சித்தனர் எனும் குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே இவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவரது மகனும் உள்ளடங்குகின்றனர். (ச-இ)

# வங்கிகளின் மோசடிக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு, பெப்.9

கணக்கு உரிமையாளர்களுக்கு அறிவிக்காமல் பணம் அறவிடப்படும் சம்பவங்கள் சில வங்கிகளில் இடம்பெற்று வருகின்றன. எனவே வங்கிகளின் இந்தச் செயற்பாடு தொடர்பில் ஆராய்ந்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில வங்கிகள் எடுக்கும் தவறான முடிவுகளைத் தடுக்க எதிர்காலத்தில் சில சட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. எவருக்கும் மற்றொருவரின் கணக்கில் இருந்து அவர்களுக்கு அறிவிக்காமல் ஒரு சதத்தைக் கூட எடுக்க முடியாது என்பது எமக்குத் தெரியும். சில இடங்களில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுகின்றன. இந்த விடயங்களுக்கு எதிராக நாம் செயற்பட வேண்டும் - என்றார். (ம-இ)

# விபத்தில் தந்தை - மகன் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.9

எம்பிலிப்பிட்டிய - மித்தெனிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், தந்தையும் 11 வயதுடைய மகனும் உயிரிழந்துள்ளனர்.

கெப் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளனர்.


சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# மேலும் 61,773 பேருக்கு தடுப்பூசி

இலங்கையில் நேற்றுமுன்தினம் மேலும் ஆயிரத்து 625 சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனத் தொற்று நோயியல்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 773 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் கொரோனாத் தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பரீட்சைக்குத் தோற்றிய 93 வயதுடைய பாட்டி

கொழும்பு, பெப்.9

கண்டியில் 93 வயதான பாட்டியொருவர் கடந்த சனிக்கிழமை திரிபிடக தர்மம் மற்றும் பாளி மொழிப் பரீட்சைகளில் தோற்றியுள்ளார்

விதானகே லீலாவதி அஸ்லின் தர்மரத்ன என்ற பாட்டியே கண்டியிலுள்ள டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் இந்தப் பரீட்சைகளை எழுதியுள்ளார். ஸ்ரீ சுமங்கல நினைவு மையத்தின் வித்யோதயா பரீட்சைக் கிளையினர் நடத்திய பரீட்சையிலேயே இந்த பாட்டி திரிபிடக தர்மம் மற்றும் பாளி மொழிப் பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ளார். 1928 இல் பிறந்த பாட்டி, களனிப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ பட்டப்படிப்புக்கு தாம் அனுமதியைப் பெறுவார் என்று நம்புகிறார். தாம் பி.ஏ. பட்டப்படிப்பை முடிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். (ப)

## வெளிநாடுகளில் சிக்கியுள்ள

# பணியாளர்களை இலவசமாக நாட்டுக்கு அழைக்கத் திட்டம்

கொழும்பு, பெப்.9

கொரோனா காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கைப் பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வரும் வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதன்படி குவைத் நாட்டில் தங்கியிருக்கும் சுமார் 5 ஆயிரம் பணியாளர்களை இலவசமாக நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருப்பவர்களை அழைத்து வருவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு சுமார் 22 ஆயிரத்து 500 பேர் அழைத்து வரப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# புத்தாண்டுக்கு முன்னர் அனைவருக்கும் மின்சாரம்

## மின்சக்தி எரிசக்தி அமைச்சு திட்டம்

எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு மின்சார இணைப்புகளை வழங்க மின்சக்தி எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பணிப்புரைக்கு அமைய இந்தத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்குச் சிறப்பு நிவாரணம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதிலொரு கட்டமாக இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துக் குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்க மின் மற்றும் எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# படகுகள் தொடர்பான சட்டங்கள் திருத்தம்

நீண்டநாள்களாக கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் படகுகள் தொடர்பான சட்டங்கள் திருத்தப்படவுள்ளன என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கடற்றொழில் துறையை மீளமைப்பதற்கான தீர்மானங்கள் மற்றும் இயங்காமல் இருந்த மீனவ சங்கங்களை ஒரே அமைப்பாக மாற்றும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் 4 ஆயிரத்து 200 படகுகளுக்கு வி.எம்.எஸ் கருவியும் பொருத்தப்படவிருக்கிறது. இதன் மூலம் கடல் எல்லைகளை உரிய முறையில் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும். தரமற்ற படகுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ய-இ)

# நாட்டின் அபிவிருத்திக்கு நல்லிணக்கம் அவசியம்



நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.9

**நாட்டின் அபிவிருத்திக்கு இன நல்லிணக்கம் அத்தியாவசியமானது என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்தின் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

மேலும், நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது காலத்தின் தேவையாகும். பல இனத்தவர்கள் மற்றும் மதத்தவர்கள் மத்தியில் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவது நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமானது.

தேசிய ஒற்றுமை மற்றும் இன நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிப்பது இலகுவான விடயமல்ல. அதனால் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகம் இதற்காக தன்னாலான பூரண ஆதரவை வழங்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்றார்.

12 பேர் கொண்ட இந்த பணியகத்தின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி குஷாந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் நாயகமாக சுனில் கன்னங்கரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சிறுபான்மை சமூகத்தில் இருந்து கலாநிதி ரிஸ்வி ஹசன், சட்டத்தரணி சுகந்தி விஜயசூரிய கதிர்காமர், மனோசேகரம், அப்ஸால் மரிக்கார் மற்றும் செந்தில் தொண்டமான் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ந-இ)



## கஞ்சாத் தோட்டம் சுற்றிவளைப்பு

நுவரெலியா, பெப்.9

நுவரெலியா நானுஓயா எடின்பரோ தோட்டத்துக்கு மேற்பகுதியில் உள்ள வனப்பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் வளர்க்கப்பட்ட கஞ்சாத் தோட்டத்தை நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சுற்றிவளைத்திருந்தனர். இந்தக் கஞ்சாத் தோட்டத்தில் 272 கஞ்சாச் செடிகள் இருந்தன எனவும், சுற்றிவளைப் போன போது கஞ்சாச் செய்கையில் ஈடுபட்ட நபர் தப்பியோடிவிட்டார் எனவும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக 3 கஞ்சாச் செடிகளை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய செடிகளை தீயிட்டு அழிப்பதற்கு விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்தனர்.

அத்துடன், இதன் பின்னணியில் உள்ளவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையையும் விசேட அதிரடிப்படையினர் ஆரம்பித்துள்ளனர். (ந)

## தனிமை நீக்கம்

கொழும்பு, பெப்.9

நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மேலும் சில பிரதேசங்கள் நேற்றுக் காலை தொடக்கம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணி அறிவித்துள்ளது. இதற்கமைய, பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்களும், பூகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்களும், மினுவாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் சிலவும் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (வ-இ)

## பி.சி.ஆர். உபகரணங்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, பெப்.9

பி.சி.ஆர் பரிசோதனை உபகரணங்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் கிடையாது என ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தினமும் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகள் கடந்த சில தினங்களாக குறைவடைந்துள்ளன. கடந்த ஜனவரி மாதம் முதல் பகுதியில் 18 ஆயிரமாக இருந்த பி.சி.ஆர் பரிசோதனைகள் கடந்த சில தினங்களாக 15 ஆயிரமாகக் குறைவடைந் துள்ளன. இரசாயனகூட பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஆறு இரசாயன கூட ஊழியர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இரசா யனப் பிரிவினர் வேறு ஆராய்ச்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர். நாளாந்தம் பரிசோதனைக்கான மாதிரிகள் அதிகரித்துச் செல்கின்றன. ஆனால் மேற்குறிப்பிட்ட காரணங்களால் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இந்த நிலையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதுதவிர பி.சி.ஆர் பரிசோதனை உபகரணங்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் கிடையாது என்றார். (வ-இ)

## சிவஞானசோதிக்கு புதிய பதவி

கொழும்பு, பெப்.9

சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராக அமைச்சின் முன்னாள் செயலாளர் வே.சிவஞானசோதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் செயலாளர் பதவியே தற்போது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளராகக் கடமையாற்றிய சிவஞானசோதி தற்போது பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்றார். (வ-இ)

## ஆசிரியர்களுக்கும் விரைவில் தடுப்பூசி

*கல்வி அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, பெப்.9

இம்மாத இறுதியில் அல்லது எதிர்வரும் மாத ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சுகாதாரப் பிரிவினரிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்;

இந்தத் தடுப்பூசியை ஆசிரியர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என நான் பரிந்துரைத்துள்ளேன். காரணம் என்னவென்றால் ஆசிரியர்கள் அவதான நிலையில் உள்ளனர். பலருடன் நாளாந்தம் பழகுகின்றனர். இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பை வழங்குவது எமது கடமையாகும்- என்றார். (ப)



## ராஜபக்சவினருக்கு தோல்வியே!

*கூறுகிறார் ருவான் விஜேவர்தன*

கொழும்பு, பெப்.9

தற்போதைய அரசு தோல்வியடைந்த அரசாங்கமாகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார். சீதுவை ரமடா ஹொட்டலில் நேற்று இடம் பெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மூன்று மாத காலத்துக்கு சில பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு சதொச மூலமாக மக்களுக்கு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. மூன்று மாதங்களுக்கு மட்டுமா இவ்வாறு வழங்கப்படும்? கல்வித்துறையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்குக்கூட இன்னமும் சீருடைகள் வழங்கப்படவில்லை.

அரசாங்கம் தற்போது சர்வதேசத்தையும், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் காரணமாக இந்தியாவையும் ஜப்பானையும் பகைத்துக் கொண்டுள்ளது.

உள்நாட்டு மக்களையும் பகைத்துக்கொண்டு வெளிநாடுகளையும் பகைத்துக்கொண்டுள்ள இந்த அரசு தோல்வியடைந்த அரசாங்கமாகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளது - என்றார். (ற-இ)



# 6 மில்லியன் ரூபா செலவில் திருமுறிகண்டிகுளம் சீரமைப்பு

**முல்லைத்தீவு, பெப். 9**

**ஜனாதிபதியின் 'சௌபாக்கியா' திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'நீர்ப்பாசன செழிப்பு' எனும் 5ஆயிரம் கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 குளங்களைச் சீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

முதற்கட்டமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட திருமுறிகண்டி குளத்தைச் சீரமைப்புச் செய்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், நீர்ப்பாசனத் திணைக் கள பணிப்பாளர் நாயகம், உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களின் செயலாளர்கள், கமநல சேவைகள் திணைக்கள மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரிகள், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோரோடு கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்துக்காக 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ப-19)

## 2,500 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு.பெப்.9

2021 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மத்தள சர்வதேச விமான நிலையத்தினூடாக 2 ஆயிரத்து 500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாத் துறையின் மீட்புத் திட்டத்தின் பேரில் கசகஸ்தானின் அஸ்தானா விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அங்கிருந்து 160 சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வந்ததன் பிரதிபலனாகவே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் சுற்றுலாத்துறை முகவர் நிறுவனமான எயிட்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்தினர் இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரை கசகஸ்தானிலிருந்து 350 சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

## வியாபாரியை வழிமறித்து பணம், நகைகள் கொள்ளை

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணத்திலிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் கொழுந்துப்புலவுப் பகுதிக்குச் சென்ற வியாபாரி ஒருவரை வழிமறித்துத் தாக்கி அவரிடம் இருந்த பணம், நகைகள் என்பவற்றை ஆறு பேருக்கும் மேற்பட்ட கும்பலொன்று கொள்ளையிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த வியாபாரியொருவர் நெல்கொள்வனவு செய்யும் நோக்குடன் தரகரைச் சந்திப்பதற்காக தேராவில் கொழுந்துப்புலவுப் பகுதிக்கு நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். தேராவில் தேக்கங்காட்டுப் பகுதியூடாக கொழுந்துப்புலவு கிராமத்துக்குச் செல்லும்போது ஆள்கள் நடமாட்டமற்ற இடத்தில் வைத்து ஆறுக்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்ட குழுவொன்று அவரை வழிமறித்து சரமாரியாகத் தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த இரண்டேமுக்கால் பவுண் தங்கச் சங்கிலி, மோதிரம் உட்பட அவர் வசமிருந்த பத்தாயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தையும் கொள்ளையிட்டு தப்பித்துச் சென்றுள்ளது. பாதிக்கப்பட்ட நபர் தலையில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-12)

## புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க நிர்வாகத் தெரிவு

முல்லைத்தீவு.பெப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக வ.அன்னலிங்கம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவராக தா. சண்முகநாதன், நிர்வாகசபை உறுப்பினர்களாக க.பூபதிராஜா, செ.பாலசிங்கம், பொ.தயா பரன், திருமதி சு.கலைச்செல்வி, திருமதி அ.விஜயதர்சினி மற்றும் திருமதி இ.மேரிகலிஸ்ரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-19)

## 'குளங்கள் புனரமைப்பு' தேசிய வேலைத்திட்டம் மன்னாரில் ஆரம்பம்



மன்னார், பெப்.9

ஜனாதிபதியின் 'சௌபாக்யா' வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் 5 ஆயிரம் கிராமிய குளங்களை புனரமைக்கும் வேலைத்திட்டம் மன்னாரில் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஒன்பது மணியளவில் மன்னார் மாவட்டச் செயலாளர் ஸ்டான்லி டி மெல் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்படி மன்னாரில் 138 கிராமிய குளங்கள் புனரமைப்பு செய்யப்பட உள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வு நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட இசைமாலைத்தாழ்வு கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், குலசிங்கம் திலீபன், மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், விவசாய திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-213)

## பொதுமக்கள் நலன் கருதி கிராமங்கள்தோறும் சமுர்த்தி வங்கிகள்

### சமுர்த்தி திணைக்கள பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

மன்னார்,பெப்.9


பொருண்மியம் நலிந்த மக்களின் நலன் கருதி சமுர்த்தி வங்கிகள் கிராமங்கள் தோறும் நிறுவப்படும் என்று சமுர்த்தி திணைக்கள பொது முகாமையாளர் ஆ.பி.பி.திலகசிறி தெரிவித்தார்.

மன்னார் நகர மத்தி சமுர்த்தி வங்கியில் கணினிமயப்படுத்தல் அங்குரார்ப்பண நிகழ்வு மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வாண்டு முதலாவது வேலைத்திட்டமாக கிராமப்புறங்களிலுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு வீட்டுடன் இணைந்த வர்த்தக நிலையம் அமைத்துக் கொடுத்து சந்தைப்படுத்தலில் முன்னேற்றம் அடையச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது வேலைத்திட்டமாக இரண்டு லட்சம் சமுர்த்தி குடும்பங்களின் பொருளாதார ரீதியான வருமானத்தை அதிகரித்தல் மற்றும் ஜனாதிபதியின் வழிகாட்டலில் மின்சார வசதியற்றவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன. ஒன்லைன் மூலம் இதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன- என்றார். (ஐ-60)



# மன்னாரில் தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு

## 11 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம்




மன்னார், பெப்.9

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேலும் 11 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மன்னார் மாவட்டத்தில் தற்போதுவரை 207 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள 11 பேரில் 6 நபர்கள் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட சிலாபத்துறை சவேரியார்புரம் பகுதியைச் சேர்ந்த மீன் வாடி ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் குடும்ப உறவினர்களாகவும், மேலும் ஒருவர் அரிப்பு பிரதேசத்தில் மீன் வாடி ஒன்றை நடத்துபவராகவும், ஒருவர் ஏற்கனவே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு உயிரிழந்த ஒருவரின் குடும்ப அங்கத்தவராகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனைய 3 நபர்களும் முசலி பிரதேச சபையில் கடமையாற்றுகின்ற அலுவலக உத்தியோகத்தர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் பெப்ரவரி மாதம்வரை 190 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 150 தொற்றாளர்கள் சமூகத்திலும், 40 தொற்றாளர்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் நகரப் பகுதியில் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது.

எனினும் முசலி பிரதேசத்தில் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்றார். (ப-56)

## வவுனியா நகரசபைக்கு எதிராக போராட்டம் நடத்தும் ஊழியர்!

வவுனியா, பெப்.9

வவுனியா நகரசபையின் ஊழியர் ஒருவர் நகரசபை நிர்வாகத்துக்கு எதிராக கடந்த 14 நாள்களாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றார். வவுனியா நகரசபையின் பொது நூலகத்தில் பணியாற்றி வந்த க.கோல்டன் என்ற நூலகப் பணியாளரே தனக்கு நகரசபை நிர்வாகம் அநீதி இழைத்துள்ளது எனத் தெரிவித்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 20 வருடங்களாக பொது நூலகத்தில் பணியாற்றி வருகின்றேன். நான் தொழிலாளர்களின் உரிமைக்காக கடந்த காலத்தில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தேன் இதன் காரணமாக என்னை பழிவாங்கும் முகமாக எனக்கு நகரசபை நிர்வாகத்தினரால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

எனது பணியை இடைநிறுத்தி என்னைப் நகரசபை பூங்காவில் சுத்திகரிப்புப் பணியில் நகரசபை நிர்வாகம் அமர்த்தியுள்ளது. நகரசபை நிர்வாகம் என்னை பழிவாங்குவதை நிறுத்தி எனக்கு மீண்டும் நூலகத்தில் பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இந்தப் போராட்டம் தொடர்பாக நகரசபை நிர்வாகத்திடம் கேட்டபோது இந்தப் பணியாளரின் நியமனம் தொடர்பான வேலையே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட காலப்பகுதியில் சுழற்சி முறையில் பணியை மாற்றி வழங்கும் முகமாகவே பணிமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப்பணியாளருக்கு எங்களால் அநீதி இழைக்கப்படவில்லை, என்று தெரிவித்துள்ளது. தொடர்ந்து தனியாகப் போராடி வந்த நகரசபை பணியாளர் க.கோல்டனுக்கு ஆதரவு தெரிவித்து, சக தொழிலாளர்களும் போராட்டத்தில் இணைந்துள்ளதுடன், இரவு பகலாக போராட்டம் இடம்பெற்றுவருகின்றது. (ற-110)



## வவு. வர்த்தக சங்கத்தினருடன் யாழ்.இந்தியத் தூதுவர் சந்திப்பு

வவுனியா, பெப்.9

யாழ்.இந்தியக் கொன்சூலர் ஜெனரல் எஸ்.பாலச்சந்திரனுக்கும், வவுனியா வர்த்தக சங்கத்தினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல், வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து எவ்வாறான வியாபார நடவடிக்கையை முன்னெடுப்பது, அதற்குரிய ஆலோசனைகள், வர்த்தகம் தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் இந்தியாவுக்குச் சென்று இலவசப் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்வதற்கான புலமைப்பரிசில்களை எவ்வாறு வர்த்தக சங்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்வது என்பவை தொடர்பில் அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதில் யாழ். இந்திய கொன்சூலர் ஜெனரலின் பிரதிநிதிகள் மற்றும், வர்த்தக சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ப-18)

## இந்த வருடத்துக்கான விளையாட்டுப் போட்டிகள் விரைவில் ஆரம்பம்!

சாவகச்சேரி, பெப்.9

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த வருட விளையாட்டுப் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

அதற்கான பதிவுகள் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போட்டிகளில் பங்கேற்கவுள்ள பதிவுசெய்யப்பட்ட மற்றும் புனரமைக்கப்பட்ட கழகங்கள் தமது விபரங்களைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரிடம் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத விளையாட்டுக் கழகங்களுக்கு போட்டிகளில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## நீதிக்கான பேரணி அரசியல் நாடகமாம்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.9

"பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியானது ஜெனிவாத் தொடருக்காக அரங்கேற்றப்பட்ட அரசியல் நாடகமாகும்." என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

"தற்போதைய சூழ்நிலையில் நெடுதூர பேரணியை நடத்தினால் அப்பேரணி தடுத்து நிறுத்தப்படும், அதனையும்மீறி நடத்தினால் பொலிஸார் தாக்குவார்கள், அதனை வைத்தே பரப்புரை செய்யலாம் என்ற நோக்குடனேயே போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு நடைபெற்றிருந்தால் சிறுபான்மையின மக்களுக்கு போராட்டம் நடத்தும் உரிமை கூட இல்லை என ஜெனிவாவில் படம் காண்பிக்கப்பட்டிருக்கும்.

இப்பேரணியால் அரசுக்கு எவ்வித அழுத்தமும் ஏற்படாது. எப்படியானாலும் ஈழத்தை அமைக்கவேண்டும் என்பதே சிலரது இலக்காக இருக்கின்றது. அந்தக் கனவை நனவாக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது " என்றார். (ஐ-44)

## ஆலயத் திருட்டுடன் தொடர்புடையவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.9

அல்லைப்பிட்டி மூன்று முடி கருமாரி அம்மன் ஆலயத்தில் திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர் வேலணை அம்பிகை நகர் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 2ஆம் திகதி குறித்த ஆலயத்தில் அம்மன் விக்கிரகத்திலிருந்த 40 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான கவரிங் நகைகள் திருட்டுப்போயிருந்தன.

இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் அங்கு பொருத்தியிருந்த கண்காணிப்புக் கமராவின் உதவியுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-25)

## குழப்பமின்றி நடந்தது பூநகரி சபை அமர்வு

கிளிநொச்சி, பெப். 9

கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபையின் அமர்வு பிரதேச சபைத் தவிசாளர் ஐயம்பிள்ளை தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கடந்த மாத அமர்வில் தவிசாளருக்கு ஒத்துழைக்காது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருந்த நிலையில், நேற்றைய அமர்வு குழப்பங்கள் எதுவுமின்றி நடைபெற்றது. சபையின் ஆட்சிக் காலத்தில் இதுவரை தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டும் நிறைவு செய்யப்படாத வேலைத் திட்டங்களான வீதி மின் விளக்குகள் பொருத்துதல், வீதிச் சீரமைப்பு போன்றவற்றை முன்னோக்கிக் கொண்டுசெல்வதென ஒருமித்து முடிவெடுக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாத அமர்வின் போது சுதந்திரக் கட்சி உறுப்பினரால் கொண்டுவரப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரால் வழிமொழியப்பட்ட கௌதாரி முனையிலிருந்து மண்ணித்தலை செல்லும் வீதியூடாக தனியொருவருடைய தேவைக்காக கனரகவாகனங்களில் போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதி கோரிய பிரேரணை இந்த அமர்வின்போது திரும்பப் பெறப்பட்டது. (ப-12)

மார்ச் மாதம் முதல்

# சாதாரண மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி!

கொழும்பு, பெப்.9
இலங்கையில் மார்ச் மாதம் முதல் வாரத்திலிருந்து சாதாரண மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 30 வயதிலிருந்து 60 வயதுக்கு இடைப்பட்ட பிரிவினருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, இதற்காக 4 ஆயிரம் மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.
நாளொன்றுக்கு 2 ஆயிரம் மத்திய நிலையங்களை செயற்படுத்துவதன் ஊடாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-இ)

# ஐ.நா.வின் அழுத்தம் மேலும் வலுவடையும்

அரசே காரணம் என்கிறார் ராஜித

கொழும்பு, பெப்.9
ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை மீது மேலும் அழுத்தம் பிரயோகிக்கக் கூடிய வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஜனாதிபதியால் அண்மையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
மேலும், அனுராதபுரத்தில் அமைந்துள்ள டி.எஸ்.குணசேகர என்ற நிறுவனத்தின் ஊடாக ராஜபக்ச குடும்பத்தினர் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானோரால் செய்யப்பட்டுள்ள மோசடிகள் குறித்த ஆதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன.
இந்த நிறுவனத்துக்கு 3.1 பில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த கடன் தொகை உரிய நேரத்தில் மீளச் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் அரச வங்கிகள் மிகப் பெரும் நஷ்டமடைந்துள்ள போதிலும் ராஜபக்ச குடும்பத்தினர் இலாபமீட்டிக் கொண்டுள்ளனர். அநாவசியமான விடயங்களுக்கு ஆணைக்குழுக்கள் அமைப்பதை விட இவ்வாறான விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழுக்கான அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.
ஆணைக்குழுக்கள் ஊடாக மக்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. தெரிந்துகொண்டே மீண்டும் மீண்டும் தவறிழைக்கின்றனர் - என்றார். (ந-இ)

மதுப்பாவனைக்காக

# இலங்கை மக்களால் ரூ.20,000 கோடி செலவு!

மதுவரித் திணைக்களம் தெரிவிப்பு!

கொழும்பு, பெப்.9
கடந்த ஆண்டு மதுப்பாவனைக்காக 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை இலங்கை மக்கள் செலவிட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.
மதுபானத்துக்காக 60 வீதம் வரி விதிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த வரித் தொகை பின்னர் நீக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், மதுப் பாவனையாளர்கள், மதுபானக் கொள்வனவுக்காக மேலதிகமாக 40 வீதமான பணத்தைச் செலவிட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.
இதன்படி, உரிய முறையில் கணிப்பிடும் பட்சத்தில், 2020 ஆம் ஆண்டு மதுப் பாவனையாளர்கள், மதுபானங்களைக் கொள்வனவு செய்வதற்காக 20 ஆயிரம் கோடிரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளனர்.
2020 ஆம் ஆண்டு மதுவரித் திணைக்களத்துக்கு 12 ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது என மதுவரித் திணைக்களத்தின் உயர் அதிகாரி யொருவர் கூறியுள்ளார்.
உற்பத்தி வரி உள்ளிட்ட பல்வேறு வகையான வரி, இந்த வரி வருமானத்தில் உள்ளடங்குகிறது எனவும் அவர் தெரிவித்தார். (ற-இ)

# பெப்ரவரி 9 முதல் 12 வரை நாடாளுமன்ற அமர்வுகள்

கொழும்பு.பெப்.9
பெப்ரவரி 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நாடாளுமன்ற அமர்வுகளை நடத்த நாடாளுமன்ற அலுவல்கள் குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படும் முறை குறித்து விவாதிக்க குறித்த கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.
நாடாளுமன்ற அமர்வு நாள்களின் எண்ணிக்கையை குறைப்பதா என்பது தொடர்பிலும், விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டன. (ஐ-இ)

# உற்பத்திப் பொருளாதாரத்தின் மூலம் நாட்டை தன்னிறைவாக்க நடவடிக்கை

**விவசாய அமைச்சு தெரிவிப்பு**

கொழும்பு.பெப்.9
உற்பத்திப் பொருளாதாரத்தின் மூலம் நாட்டை தன்னிறைவடையச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த இலக்குக்கு அமைய, அதிகாரிகள் தங்களின் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் விவசாய அமைச்சால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
'நாட்டின் வெங்காயத் தேவையில், நூற்றுக்கு 22 சதவீதமானவை உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில், எஞ்சியவை இறக்குமதி செய்யப்படுகின்றன.
இதற்காக வருடாந்தம் 12 முதல் 15 பில்லியன் ரூபா வரையான பணம் செலவு செய்யப்படுகின்றது. இந்த நிலையில், இந்த ஆண்டு வெங்காய உற்பத்தியை நூற்றுக்கு 35 சதவீதமாகவும், 2023 ஆம் ஆண்டில் 60 சதவீதமாகவும் அதிகரிக்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-இ)

# இன்றைய நாள்

**மேடம்:** உழைப்பால் உயர்வு வரும். தகவல் தொடர்பு ஆக்கம் தரும். செய்தி ஒன்று வந்து சந்தோஷத் திகைப்படையச் செய்யும். அக்கம் பக்கத்தினருக்கு உதவி செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**இடபம்:** எதிலும் நிதானமாக யோசித்து ஈடுபடுவது நல்லது. அடுப்பு, வாகனத்தில் விழிப்புடன் செயல்படுவது அவசியம். செலவுகள் குறையும். அலைச்சல் நன்மை தரும்.

**மிதுனம்:** சகோதரர்களால் திடீர் நன்மையும் லாபமும் வரும். புதிய வீடு, நிலம் வாங்குவீர்கள். பகைவரிடம் கவனம் தேவை. பணியாளர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும்..

**கடகம்:** பேச்சாற்றலும், பண வரவும் கூடும். பணி சிறக்கும். குடும்பத்துக்கு நன்மைகள் நிகழும். தொழிலில் வளர்ச்சி உண்டு. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு அனுகூலமான நாள்.

**சிம்மம்:** சிறிய சாதனை ஒன்று செய்வீர்கள். வாகனம் வாங்க வழிபிறக்கும்.சொத்துக்களால் வருவாய் கிடைக்கும். பக்தியில் தெளிவு பிறக்கும். அலைச்சல் கூடும்.

**கன்னி:** நீண்ட நாள் கனவு ஒன்று இன்றைக்கு நிறைவேறும். ஆபரணங்கள் சேரும். கலைஞர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். பொது நலப்பணிகளின் ஈடுபாட்டால் வரவேற்பு அதிகரிக்கும்..

**துலாம்:** உங்களின் செயல் ஒன்றால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். பயண வாய்ப்பு வரும். அவசியமானால் மட்டும் ஏற்கலாம். பொழுது போக்குகளில் ஈடுபட்டு குதூகலம் அடைவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் உதவுவதால் கஷ்டத்திலிருந்து தப்புவீர்கள். கணவன் மனைவி உறவு நிலை சீராக இருந்து வரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். நன்மைகளை பெறுவீர்கள்.

**தனுசு:** எடுத்த விஷயத்தில் வெற்றி பெறுவீர்கள். சொத்துச் சேரும். வசதிகள் பெருகும். பணியிட சகாக்கள் ஆதரவாக இருப்பர். பல வகைகளில் செல்வம் சேர்ந்து சேமிப்புக்கு உதவும்.

**மகரம்:** நன்மையும் அல்லாததும் கலந்து நிகழும். மகிழ்ச்சி உண்டு. புகழ் அதிகரிக்கும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். வெளிநாட்டில் இருக்கும் உறவினரால் புது வாய்ப்பு வரும்.

**கும்பம்:** ஏகப்பட்ட செலவுகள் வந்தாலும் சுலபமாக சமாளிப்பீர்கள். கவலைகள் தீர்ந்து புதிய பிரச்னை வந்தாலும் தயாராக இருப்பீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். நன்மை உண்டு.

**மீனம்:** புதிதாய் ஒரு விஷயத்தில் ஈடுபாடு உண்டாகும். உங்கள் செயல்பாடுகளுக்கு நன்கு வரவேற்பு கூடும். பல வித வேலைகள் சூழ்ந்தாலும் உற்சாகத்துக்கு குறைவில்லை.

# இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மரில் மக்கள் புரட்சி!





**நைபிட்டோ, பெப். 9**
**மியான்மரில் ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசு துப்பாக்கி முனையில் அகற்றப்பட்டு அங்கு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தலைநகர் நைபிட்டோ உள்ளிட்ட பல இடங்களில் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது.**

மியான்மரில் கடந்த 2017ஆம் ஆண்டு சுமார் 7.4 லட்சம் ரொஹிங்யர்கள் மியான்மர் இராணுவத்தால் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டனர். அவர்கள் அகதிகளாக அயல்நாடான பங்களாதேஷுக்குச் சென்று அங்கு தஞ்சம் புகுந்துள்ளனர்.

அவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் 'மியான்மர் இராணுவம் இனச் சுத்திகரிப்புச் செய்தமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மியான்மர் இராணுவத்தின் நடவடிக்கைகள் இனச்சுத்திகரிப்புக்கான பாடப்புத்தகம் போன்று உள்ளன' என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

இதையடுத்து மியான்மருக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வில் மியான்மர் இராணுவத்துக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்றும் கருதப்பட்டது. இந்த நிலையில் மக்களால் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பொதுத்தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட சூச்சி தலைமையிலான அரசை ஆட்சியில் இருந்து அகற்றியது மியான்மர் இராணுவம்.

அங்கு அடுத்த ஓர் ஆண்டுக்கு அவசர கால நிலையும் இராணுவ ஆட்சியும் நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இராணுவ ஆட்சிக்கு எதிராகத் தம் உயிரைத் துச்சமென நினைத்து மியான்மர் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்துள்ளனர்.

தலைநகர் நைபிட்டோ மற்றும் வர்த்தக நகரான யாங்கூன் ஆகியவற்றில் நேற்று சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் பல லட்சம் மக்களின் பங்குபற்றலுடன் இன்னும் விரிவடையும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## பனிச்சரிவில் சிக்கி பலர் உயிரிழப்பு

*இந்தியாவில் துயரம்*

புதுடெல்லி, பெப். 9
இந்தியாவின் உத்தரகாண்ட் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 16 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேரைக் காணவில்லை. அவர்களின் நிலை தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

பனிச்சரிவு இடம்பெற்ற இடத்தில் கட்டப்பட்டுவந்த நீர்மின் உற்பத்தி நிலையத்திலேயே இந்தப் பேரிடர் நிகழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. பனிச்சரிவில் நீர்மின் உற்பத்தி நிலையமும் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

### யேமன் உள்நாட்டுப் போர்

## சவூதிக்கான ஆதரவை கைவிடுகின்றது அமெ.!

வொஷிங்டன், பெப். 9
யேமன் உள்நாட்டுப் போரில் சவூதி அரேபியாவுக்கு வழங்கிவரும் ஆதரவைக் கைவிடுவதற்கு பைடன் முடிவெடுத்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



யேமனில் அரசுக்கும் ஹவுத்திக் கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையில் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. யேமன் அரசுக்கு சவூதியும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரானும் ஆதரவு வழங்குகின்றன. சவூதி தலைமையிலான கூட்டுப்படையில் அமெரிக்காவும் உள்ளது. இராணுவத் தகவல்கள், உளவுத்தகவல்கள், சிப்பாய்கள், ஆயுதத் தளபாடங்கள் உள்ளிட்ட உதவிகளை சவூதிக்கு அமெரிக்கா செய்து வந்தது. இந்த நிலையில் இந்த ஆதரவைத் திரும்பப் பெற பைடன் முடிவெடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## ஆய்வுகளுக்கு சீனா முழு ஒத்துழைப்பு!

பீஜிங், பெப். 9
கொரோனாவின் தோற்றம் குறித்து சீனாவில் குறிப்பாக வுகானில் நடத்தப்பட்ட ஆய்வுகளுக்கு (உலக சுகாதார நிறுவனத்துக்கு) சீனா முழு ஒத்துழைப்பு வழங்கியது என்று ஆய்வு மேற்கொண்ட குழு அறிக்கையிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வுகானில் நாங்கள் எந்தவிதத் த[illegible]யுமின்றி ஆய்வு செய்தோம். சீன அர[illegible]ங்களுக்கு முழுமையான ஒத்துழை[illegible]பு அளித்தது. ஆய்வு தொடர்பான விபர[illegible]ள் மற்றும் அறிக்கைகள் விரைவில் பகிர[illegible]ப்படுத்தப்படும் என்றுள்ளது. (ம)



## விவசாயிகளின் போராட்டத்தை இன்னமும் ஆதரிக்கிறேன்


*கிரெட்டா தெரிவிப்பு*

நான் இன்னமும் விவசாயிகளின் போராட்டத்தை ஆதரிக்கிறேன் என்று காலநிலைச் செயற்பாட்டாளர் கிரெட்டா தன்பெர்க் தெரிவித்தார். இந்திய விவசாயிகளின் போராட்டத்துக்கு சர்வதேச அளவில் ஆதரவு குவிந்து வருகின்றது. முன்னதாக தன்பேர்க், இந்திய விவசாயிகளின் போராட்டத்துக்கு நான் முழுமையான ஆதரவு தருகின்றேன் என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து, அவரின் கருத்து இந்தியாவுக்குள் வன்முறையைத் தூண்டுகின்றது என்று தெரிவித்து டெல்லி பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். இந்த நிலையில் கிரெட்டா தன்பேர்க் விவசாயிகளின் போராட்டத்துக்கு மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளார். 'நான் இன்னமும் விவசாயிகளின் அமைதியான போராட்டத்தை ஆதரிக்கிறேன். எந்தவொரு வெறுப்பும், அச்சுறுத்தல்களும், மனித உரிமை மீறல்களும் ஒருபோதும் என் நிலைப்பாட்டை மாற்றாது' என்று பதிவிட்டுள்ளார். (ம)

உசிலமணி

# மக்கள் உணர்வோடுதான் இருக்கிறார்கள்






### அன்றும் இன்றும்

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையை இராணுவத்திடமிருந்து புலிகள் கைப்பற்றிய நாள். தமிழர்கள் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் பூத்திருந்த நாள். யாழ்ப்பாணத்தின் குக்கிராமங்களிலிருந்தும் மக்கள் நகரை நோக்கிப் படையெடுத்து வந்தார்கள். எல்லோர் முகத்திலும் சந்தோசம். கோட்டையைத் தகர்த்த போராளிகள் நகர வீதிகளில் மக்களால் கொண்டாடப்படுகின்றார்கள். நகரிலிருந்த வர்த்தக நிலையங்கள் திறக்கப்படுகின்றன. போராளிகளுக்கு உணவுப் பண்டங்கள், உடைகள் என்று அள்ளி அள்ளி வர்த்தகர்கள் கொடுக்கின்றார்கள். 'மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்' என்று அந்தக் காட்சியைப் பார்த்து கிட்டு சொல்கின்றார்.

2021ஆம் ஆண்டு 'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி அம்பாறையில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் முடிவடைந்தது. நெடும் பயணம் சோர்வில்லாது நடந்து இலக்கை அடைந்தது. எவரும் எவரிடமும் உதவிகள் கேட்கவில்லை. ஆனால் அள்ளிக் கொடுத்தார்கள். பேரணி நகர்ந்த பிரதான வீதிகளிலிருந்த கடைக்காரர்கள் தங்களால் என்ன கொடுக்க முடியுமோ அதை விரும்பி உவந்தளித்தார்கள். கிளிநொச்சியில் தண்ணீர் போத்தல் வாங்க, பேரணியில் பங்கேற்ற ஒருவர் கடைக்குள் செல்கிறார். கடை முதலாளி எந்தப் பணமும் வாங்காமல் தண்ணீர் போத்தல் 'கேஸை' வாகனத்தில் ஏற்றி விடுகிறார். வீதி நெடுகிலும் நடந்தது இதுதான். குளிர்பானப் போத்தல்கள், ஜூஸ் போத்தல்கள், பிஸ்கட்டுக்கள் என்று தாராளமாக வழங்கினார்கள். போராட்டக்காரர்கள் எங்கும் களைத்து சோர்ந்துவிடக்கூடாது. 'எங்களுக்காகத்தான் போறாங்கள். நாங்கள்தான் போகேல்ல. எங்களால என்ன செய்ய இயலுமோ அதைச் செய்யிறம்' என்ற உணர்வுடன் அள்ளிக் கொடுத்தார்கள். மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்.

### முகமாலை வரவேற்கிறது

2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அரச கட்டுப்பாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 8 ஆண்டுகளின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் நுழைகின்றார்கள். ஒட்டுமொத்த யாழ்ப்பாணமுமே முகமாலையில் திரண்டு புலிகளை தமது தோளில் தூக்கி வரவேற்கின்றது. படையினரின் தடைகளை உடைத்து முன்னேறிப் பாய்ந்து புலிகளை வரவேற்றனர். புலிகள் யாழ்ப்பாணம் நல்லூரை வந்தடையும் பிரதான வீதிகள் தோறும் இருபுறமும் மக்கள் நின்று வரவேற்றார்கள்.

'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணியும் முகமாலையில் வைத்துப் பொறுப்பேற்கப்பட்டது. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் திரண்டிருந்தனர். அந்த அளவுக்கு மக்கள் யாழ்ப்பாணத்தில் திரள்வார்களா? என்ற சந்தேகம் பலராலும் எழுப்பப்பட்டு வந்தது. ஆனால் அவையனைத்தையும் பொய்யாக்கி மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது. முகமாலையிலிருந்து பேரணி நகர்ந்த வீதியின் இரு மருங்கிலும் மக்கள் திரண்டு நின்று வரவேற்றனர். சுமார் 3 ஆயிரம் மோட்டார்சைக்கிள்களில் இளைஞர்கள் பேரணியுடன் பவனி வந்தார்கள். சுமார் ஆயிரம் வான்கள், கார்கள், லொறிகள் என்று வாகனங்கள் பேரணியுடன் வரிசையில் இணைந்து கொண்டன. சிவப்பு மஞ்சள் கொடிகள் பட்டொளி வீச, உரிமைக் கோசங்கள் விண்ணதிர யாழ்ப்பாணத்தில் மக்களால் பேரணி வரவேற்கப்பட்டது. மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்.

### பிஞ்சுகளுக்கும் உணர்வுண்டு

'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றை அடுத்த சந்ததித்துக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறது. அபிவிருத்தி மாயைகளும், வரலாற்றுத் திரிபுகளும் மேலெழுந்து வரும் சூழலில் உரிமைக்கான போராட்டம் என்றால் என்ன என்பதை கண்டுணர்த்தி பிஞ்சுகளையும் பங்கேற்க வைத்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர்மட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் பின்வருமாறு கூறினார். எனது மகனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு செம்மணி வரவேற்புவளைவுக்குச் சென்றேன். பேரணி வரும்வரை அங்கிருக்கும்போது, 'செம்மணியின் கதையை' 'கிருசாந்தி காணாமல் ஆக்கப்பட்ட வரலாற்றை' 'குடாநாட்டின் இளைய சமுதாயம் காணாமல் ஆக்கப்பட்டதை' எடுத்துச் சொன்னேன். பேரணி வரும்போது உரிமைக் கோசங்களைக் கேட்டுக் கொண்டே மகன் வந்தான். யாழ்ப்பாணத்தை அண்மித்தபோது மோட்டார் சைக்கிளில் இருந்தவாறே, கைகளை உயர்த்தி அவனும் கோசம் போடத் தொடங்கிவிட்டான். மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்.

### கண்ணீர் பிரவாகம்

'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி அதில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையுடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிடமுடியாதது. பேரணியின் எழுச்சியைப் பார்த்து பலர் பிரமித்தார்கள். எல்லோர் வாய்களும் 20 ஆண்டுகளின் பின்னர் எழுச்சி என்பதைத்தான் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. நீண்ட வாகனப் பேரணி, இளைஞர்களின் உரிமைக் கோசங்கள், சிவப்பு மஞ்சள் கொடிகளைப் பார்த்ததும் பலருக்கு கண்




கிவிட்டன. பேரணியை நேரில் அல்லது காணொலியில் பார்த்த எல்லோருக்கும் இந்த உணர்வு ஏற்பட்டுத்தான் இருக்கின்றது. நாங்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் எங்கள் மனங்கள் உங்களுடன், பேரணியுடன்தான் இருக்கின்றது. மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்.

### கவனம்! கழுகுகள் பார்க்கின்றன!!

2002ஆம் ஆண்டு சமாதான காலம். உரிமைக்கான பேரணிகளும், போராட்டங்களும் குறைவில்லாது யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரங்கேறின. மக்கள் குறிப்பாக இளைய சமுதாயம் எழுச்சியுடன், வயதுக்கே உரிய துடிப்புடன், கோபாவேசத்துடன் கலந்து கொண்டது. அப்போதும் கழுகுகள் படமெடுத்துக் கொண்டிருந்தன. சிவில் உடைகளில் மக்களுடன் மக்களாக, ஊடகர்களுடன் ஊடகர்களாக வந்து படங்களை, வீடியோக்களை எடுத்துக்கொண்டிருந்தார்கள். கழுகுகள் தங்கள் இரைகளைத் தூக்குவதற்கான தருணம் பார்த்திருந்தன. 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏ9 வீதி மூடப்பட்டது. தருணம் பார்த்திருந்த கழுகுகள் வேட்டையைத்தொடங்கின. கூடவே ஒட்டுக்குழுக்களான ஓநாய்களும் சேர்ந்து கொண்டன.

'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி ஆட்சியாளர்களுக்கு கலக்கத்தைக் கொடுத்திருக்கும். 20 ஆண்டுகளின் பின்னர் அதுவும் இப்படியொரு கொடூரப் போரை நடத்தி கொன்றொழித்த பின்னர், 'மக்கள் புரட்சி' வெடிப்பதை ஏற்றுக் கொள்ள அவர்களுக்கு எப்படி மனம் வரும்? அரசுகளுடன் ஒட்டியிருந்து தங்கள் வயிறுகளை நிரப்பிக்கொள்ளும் எட்டப்பர்கள்தான் பேசாமல் இருப்பார்களா? இந்தப் பேரணியிலும் சில கழுகுகள் கண்காணித்தனதான்.

இதனைச் சொல்வது அச்சுறுத்துவதற்காக அல்ல. ஆனால் அவதானம் தேவை! இளைய சமுதாயம் எங்கள் உரிமைப் போராட்டத்துக்கு எப்போதும் உரம். மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்.

### மக்கள் உணர்வு


நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பத்தாகப் பிரிந்து நின்று வாக்குக் கேட்டன. இதனாலோ என்னவோ அவர்கள் பலமிழந்தார்கள். அதேநேரம் அபிவிருத்தி மாயையைக் காட்டிய அரசின் ஒட்டுண்ணிகள் இங்கு தங்கள் வெற்றிகளைப் பெற்றார்கள். 'பிரபாகரன் மண்ணிலேயே வென்றுவிட்டோம்' என்று எக்காளமிட்டார்கள். இளைஞர்கள் அந்த மாயையின் பிடிக்குள் சிக்குண்டுவிட்டார்கள். மக்கள் உரிமைக்கான கோசங்களால் சலித்துவிட்டார்கள். தமிழ்த் தேசியம் இனி மெல்லச் சாகும் என்றெல்லாம் கணித்தார்கள்.

ஆனால் மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள். தமிழ்த் தேசிய சக்திகள் ஓரணியில் அணிவகுத்து நின்றால் அதன் பின்னர் அலையெனத் திரண்டுவரத் தயாராக இருக்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். எந்த மாயைக்குள்ளும் நாங்கள் சிக்கவில்லை. தேசக் கனவுடன்தான் இருக்கின்றோம் என்பதை இளைஞர்கள் உரத்துக் கத்திச் சொல்லியிருக்கின்றார்கள். 60 ஆண்டுகள் உரிமைக்காகப் போராடியும் நாம் களைத்துப் போகவில்லை. சலித்துப் போகவில்லை. இன்னும் உணர்வோடுதான் இருக்கின்றோம் என்பதை மக்கள் முரசறைந்து சொல்லியிருக்கின்றார்கள். மக்கள் உணர்வோடுதான் இருக்கின்றார்கள்.



சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்ட

## படையினர் 7 பேருக்கு கொரோனாத் தொற்று



கொழும்பு,பெப்.9

கொழும்பில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்ற சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த படையினர் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கல்கிரியகம பயிற்சி மையத்தைச் சேர்ந்த படையினருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திடீரென ஏற்பட்ட நோய் காரணமாக இவர்கள் 7 பேரும் தம்புள்ள ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கல்கிரியகம பயிற்சி மையத்தைச்சேர்ந்த 140 படையினர் சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

**IMMEDIATE Vacancy for Admin cum Account officer**

**Eligibility requirement**

- GCE A/L science / commerce stream
- Computer literacy MS office.
- Language competence in Tamil / English.
- Working experience in same job is added advantage.
- Experience in quick book account package is added advantage.
- Prefer to work extended hours.
- Salary negotiable.

**Suitable candidate contacts our office with the CV,**

CONTACT DETAILS

**Manager**
MEDCON Pvt Ltd
171, 1st cross street, Jaffna.
Contact No:0770124415,
0214923587

## மரண அறிவித்தல்



### ஏரம்பு தங்கவேலு

(விதுஷா கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

பொன்னாலையை பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட விதுஷா கிறீம் ஹவுஸ் உரிமையாளருமான ஏரம்பு தங்கவேலு அவர்கள் நேற்று (08.02.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஏரம்பு நாகம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, நாகலிங்கம், இராசம்மா, தம்பித்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குணலட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கனகம்மா, கனகரத்தினம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஈமைக்கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக சங்கானை விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## உப அலுவலகம், உடுவில்.

### வட்டாரம் -9 தாவடி சுதுமலை ஊரெல்லை ஒழுங்கை, ஆதன இல - 36/5

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -9 தாவடி சுதுமலை ஊரெல்லை ஒழுங்கையில் அமைந்துள்ள 36/5 இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் வாமதேவனும் ஏனையோரும் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "பத்தாவத்தையும் மாத்தனையும் அல்லது மென்னி வளவு நிலப்பரப்பு 3 உம் பயிர்வகைகளும் உடைய இந்த ஆதனமானது சபாரத்தினம் வாமதேவன் என்பவரால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் சுதுமலை கிழக்கு மானிப்பாய் வாமதேவன் சிவகுமாரின் தந்தையார் சபாரத்தினம் வாமதேவனின் காலஞ்சென்ற தாயார் நாகம்மாவின் சொந்தமும் நிந்தமுமாய் இருந்து அவர் இறக்க ஒரே வாரிசான தனது தந்தைக்கு வந்தடைந்த உரிமையென்றும் அவர் உயிரோடிருக்கும் வரை இவ்வாதனத்தை ஆண்டனுபவித்து வந்துள்ளார் என்றும் அவர் இறப்பின் பின் அவரின் வாரிசுகளான தனக்கும் தனது சகோதரன் ஜெயக்குமாருக்கும் சரி அரைவாசியாக வந்தடைந்த உரிமையும் எமது ஆட்சியு மானது என்றும் இவ்வாதனம் தொடர்பான சகல ஆவணங்களையும் தான் தொலைத்து விட்டேன் என்றும் அவற்றை தேடிக் கண்டுபிடிக்க எடுத்த பயனளிக்கவில்லை என்றும் இவ்வாதனத்தில் தமக்குள்ள உரிமையை நிலைநாட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் வெளிப்படுத்தல் உறுதி எழுத வேண்டிய தேவை ஏற்பட்ட தென்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற உளாந்தா T. பாலசுப்பிரமணியம் அவர்களால் 2018.12.17 இல் அளந்து தயாரிக் கப்பட்ட 949/2018 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 2குளி 16..35 உம் அதற்குரியவைகளும் இதற்தெற்கெல்லைகளாக

| | | |
|---|---|---|
| வடக்கு | :- | கதிர்வேலு சிவலிங்கம் மற்றும் இராசேந்திரம் சுரேஸ்குமாரின் ஆதனம். |
| கிழக்கு | :- | கதிர்வேலு தருமராசாவின் ஆதனம் |
| தெற்கு | :- | சிவபாதம், மாரிமுத்து லட்சுமணன் மற்றும் துரைராசா காண்டீபன் ஆகியோரின் ஆதனம் |
| மேற்கு | :- | கதிரவேலு சிவலிங்கத்தின் ஆதனம் மற்றும் ஒழுங்கை முகப்பு |

எனவே மேற்குறித்த ஆதனத்தினை இராசேந்திரம் மகள் கயன்சா தனது பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.


எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது இராசேந்திரம் மகள் கயன்சா எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.தர்ஷன்.**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை, சுன்னாகம்.**
**2021.01.19**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 08 |
| 08 | 02 |
| 1953 | 2021 |



### கந்தையா தனபாலசிங்கம்

அச்சுவேலி பத்தமேனியை பிறப்பிடமாகவும் சன்னதி வீதி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பவளம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா அன்னமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகனும், ஜெயமலரின் பாசமிகு கணவரும்,சயந்தன் (பிரான்ஸ்), சஜீவன் (ஜேர்மனி), சாகுதன் (பிரான்ஸ்) சங்கீதன் (பிரான்ஸ்), சர்மிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளாயினி, றஞ்சினி, யாழினி, சர்மிளா, சிவசாந்தினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கமலா தேவி, புஸ்பராணி, தனலட்சுமி, சிவனடி, சிறிஸ்கந்தராஜா, மகேஸ்வரன், காலஞ்சென்ற பூபாலசிங்கம், கிளிஅக்கா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி (துரை), சின்னத்துரை (பத்தமேனி), சின்னத்துரை (நவக்கிரி) மற்றும் புலேந்திரன் (இலங்கை), தயாவதி (பிரான்ஸ்), சிவாஜினி (கனடா), காமினி (கனடா), காலஞ்சென்ற அரவிந்தமலர், திருவருள்நாதன், இலட்சியநாதன், வேல்அருள், சேரங்கன், காலஞ்சென்ற தனமலர், அரவீந்திரன், ஆகியோரின் மைத்துனரும், றெனிசன், சஞ்சீவ், சாகித்தியன், அபிசாந், அக்சித், அஸ்விகா, நிதுன், மகிழினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சன்னதி வீதி,**
**அச்சுவேலி.**

**தகவல்**
**பிள்ளைகள்.**
**077 177 0707**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 08 |
| 07 | 02 |
| 1942 | 2021 |



அமரர்

### நாகலிங்கம் பாலசிங்கம் (பாலு)

உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசிங்கம் அவர்கள் (08.02.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நாகலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குணரத்தினம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலபூபதியின் அன்புக் கணவரும், அமரர்களான தங்கமலர், நடராஜபிள்ளை,தெய்வேந்திரராஜா, மற்றும் செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர்களான தங்கேஸ்வரி (தங்கம்), பூபாலசிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தன், சிவராசா, தர்மதுரை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க் கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் கிழக்கு,**
**கற்பகப்பிள்ளையார் கோவிலடி.**

**தகவல்**
**நடராஜபிள்ளை நிருபன் (சுவிஸ்)**
**மனைவி- 076 661 9212**
**மைத்துனன் (ஸ்ரீ)- 077 998 3815**
**பெறாமகன் (அப்பன்)- 077 551 4327**

# வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளியில் விசேட வழிபாடு!

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில், ஈசான பாகத்தில் அமைத்துள்ள சிங்கார வேலவன் சிவகாத்திரி அம்பாள் சுந்தரசு வர்க்க வாயில் சன்னிதானத்தில் விசேட பூசை வழிபாடுகள் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும், அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இறை ஆசி வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில், சன்னிதான பிரதம குருக்கள் ராஜஸ்ரீ சிவ. கமல்ராஜ்க்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ற-இ)

**நாஹா மருத்துவ நிலையம்**

கை, கால் அதிக விறைப்பு, எலும்பு தேய்வடைதல், மாறாத புண்கள், அல்சர், பாரிசவாதம், பெண்ணியல் நோய்கள், குழந்தையின்மை சிறப்புமருந்தியல்

T.P: 077 321 2740

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி, (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்.



தோற்றம் 09.10.1935 — மறைவு 11.01.2021

அமரர் திருமதி

### கமலபூரணம் சிவமூர்த்தி

*(திதி: மார்கழி மாத - தேய்பிறை திரயோதசி)*

அன்னாரின் அமரத்துவ செய்தியறிந்து கொட்டும் மழையிலும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பதாகைகள் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும், தொலைத்தொடர்புகள் ஊடாக எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை காலை 6.00மணியளவில் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மண்டபத்திலும் (சுப்பர் மடம்), அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வு மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


விஸ்வதுல வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

பெறாமகன் - க. சுதாகரன்
மற்றும் குடும்பத்தினர்.

## சிறையில் ஒருவருக்கு கொரோனா

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டது. கொழும்பைச் சேர்ந்த குறித்த நபர் கடந்த 31 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதே தொற்று உள்ளமை நேற்றுத் தெரியவந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (த110)

## 3 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
**பசுபதி பாலரஞ்சன்**

தோற்றம் 14.12.1965

மறைவு 15.01.2018

திதி: திரியோதசி
09.02.2021

ரஞ்சனமான ரத்தினமே! ரத்த பந்தம் விட்டு எங்கு சென்றீரோ
ரம்மியமான பேச்சால் பிரமிக்க வைப்பவரே - உம்
ரம்மியமான முகம் காண ராப்பகலாய் தவிக்கின்றோம்
மூன்றாண்டானதையா நேரில் உமைக்கண்டு

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

குடும்பத்தினர்.

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபாய்

தொடர்புகளுக்கு - 0773341281

**வீடு வாடகைக்கு**

Ginna lane Jaffna வில் மேல் வீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு.

077 482 3891

**விற்பனை பிரதிநிதி தேவை**

அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி (Sales Rep) ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:
074 106 8944

**வாகனங்கள் விற்பனைக்கு**

பிரபல நிறுவனத்தின் பாவனையில் உள்ள வாகனங்கள் விற்பனைக்குண்டு

- Toyota ESTIMA HYBRID
  இல.KY- XXXX
  பாவிக்கப்பட்ட km - 170 000km
  விலை - 47 இலட்சம்
- GLORY - 330
  இல.CAU- XXXX
  பாவிக்கப்பட்ட km - 51900 km

இரண்டு வாகனங்களினதும் மொத்த விலை 75 இலட்சம்.
இரண்டு வாகனங்களையும் ஒன்றாக வாங்கும் பட்சத்தில் 65 இலட்சத்திற்கு விற்கப்படும்.

விபரங்களுக்கு: 077 470 5759
076 329 5792

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.01.2021 செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி
### செல்வரத்தினம் ஞானரஞ்சிதமலர்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (11.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சோமராந்தோட்டம்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திரு.செல்லப்பா தெய்வேந்திரம்

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திரு.செல்லப்பா தெய்வேந்திரம் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - பிள்ளையாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கௌரீஸ்வரி (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், முருகதாஸ், ஜெகதீஸ்வரி, மனோகரன் (கனடா), குலேந்திரன் (கனடா), நாகேஸ்வரி (கனடா), ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மலர்விழி, ஆலாலசுந்தரம், ரூபி, அனுசிகா, செல்வராசா, நந்தா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சீவரத்தினம், கோபாலபிள்ளை, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம் மற்றும் திலகவதி, அப்புலிங்கம், இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம், காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனோஜன், நிரோஜன், கானுஜா, லக்சனா, தனுசன், கார்த்திகா, கௌசிகா, கௌசல்ஜன், கவிந்தன், ஆரவி, பிரசாந், பிரவீந், கீர்த்திகா, லக்சன், லக்சியா, லக்சனா, லகீசன், ஜெபிசா, கிரிஷ், ஞானேஸ்வரன், தர்சன், சிந்தூரி ஆகியோரின் பேரனும், சர்மி, வினோ, கோதை, சஜீவன், இனுசா, அஜிந் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்

தகவல்:
குடும்பத்தினர்.

**முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்**

## இலங்கையை...

ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற இலங்கையின் 73ஆவது சுதந்திரதின நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தவறான எண்ணங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாம். உலகளாவிய தொற்று நோயை மிகக்குறுகிய காலத்தில் எதிர்த்துப் போராடுவதற்காக இலங்கை அரசு சாதகமான அம்சங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக அமெரிக்காவில் உள்ள இலங்கையர்கள் இணையம் ஊடாக இந்த நிகழ்வில் பங்கேற்றனர். நிகழ்வில் மதத் தலைவர்கள், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மத்திய மற்றும் ஆசியாவுக்கான பதில் செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## புலம்பெயர்...

கடந்த சில நாள்களாகச் சில தரப்பினரின் குறுகிய நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டன. இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா.

வடக்கு மற்றும் கிழக்கில் அரச அடக்குமுறைக்கு எதிராகக் கடந்த சில தினங்களாக பெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அது தொடர்பில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கூட்டத்தொடர் நடக்கவுள்ள நிலையில் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போன்று இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேநேரம் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் ஏற்கத்தக்கவை. ஆயினும் கொரோனாத்தொற்றின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். என்றார். (எ-இ)

## யாழ்.பல்கலைப் பட்டமளிப்பில் 2,608 பேருக்கு பட்டங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இரண்டு நாள்களிலும் ஆறு அமர்வுகளாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப்படிப்புகள் உள்வாரி, வெளிவாரி என 2 ஆயிரத்து 608 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் முன்னிலையில் நடைபெறவுள்ளது. (கு)


### மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 03 . 1932



மறைவு 08 . 02 . 2021

**அப்புக்குட்டி துரைராசா (அம்மான்)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி துரைராசா (அம்மான்) அவர்கள் 08.02.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.2.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யுவசக்தி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்பு : 0770781237

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கார்த்திகேசு சோதிலிங்கம்**

திதி: 08.02.2021

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத்தலைவனே
தங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

போத்தலை,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.
021 205 9255

### மரண அறிவித்தல்



**கந்தையா சுப்பிரமணியம்**

வரணியை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், மோகனாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைரமுத்து புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மேந்திரா (உரிமையாளர், தர்சா சவுண்ட்ஸ்), பத்மரூபி, கஜரூபி (ஆசிரியர், யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்), தர்ஷரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, இராமநாதன், வேலாயுதம், யோகநாதன், விக்னேஸ்வரன், இந்திராணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வன்னியசிங்கம், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், சிறிகரனின் அன்பு மாமனாரும், மதுமி, சந்தியா, மதுஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.H லேன்,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

தகவல்
மகன் (தர்மேந்திரா)
தர்ஷா சவுண்ட்ஸ்
077 622 1381

### மரண அறிவித்தல்



**ஸ்ரனிஸ்லோஸ் விமலதாஸ்**

யாழ், 72/ 31, இராஜசிங்கம் வீதி, திருநகரை பிறப்பிடமாகவும், திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரனிஸ்லோஸ் விமலதாஸ் கடந்த (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் ஸ்ரனிஸ்லோஸ்-வேவி மெத்தலின் (வேவி) தம்பதியரின் இளைய மகனும், அமலதாஸ், கமலதாஸ், விஜயதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சஞ்சய், அரவிந், சாம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஆராதனை ஒப்புக் கொடுத்த பின்னர் கல்வாரி சேமக்காலை தாவடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

72/31, இராஜசிங்கம் வீதி,
திருநகர், யாழ்ப்பாணம்.
076 368 2605

தகவல்
குடும்பத்தினர்.
(சுவிஸ்லாண்ட்)

# அதிபரை நியமிக்கக் வலியுறுத்தி யூனியன் குளத்தில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி யூனியன் குளம் பாடசாலைக்கான அதிபரை நியமிக்கக் கோரி பாடசாலை நுழைவாயிலை மூடி நேற்று கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி, கல்வி வலயத்துக்கு உட்பட்ட பின் தங்கிய கிராமத்தில் அமைந்துள்ள யூனியன் குளம் பாடசாலைக்கு கடந்த 8 வருடங்களுக்கு மேலாக நிரந் தர அதிபர்கள் எவரும் நியமிக்கப்படாமல் இருப்பதால் மாணவர்களின் கல்வி முதற் கொண்டு, அபிவிருத்தி சார்விடயங்களிலும் பாடசாலை பின்தங்கி காணப்படுகிறது. ஏற்கனவே பெற்றோரால் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டு கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பட்ட போதும் இதுவரை அதிபர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலையில் காலை அந்தப் பாடசாலைக்கு நிரந் தர அதிபரை நியமிக்கக் கோரி பெற்றோர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களால் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் பாடசாலை நுழைவாயிலை மூடி குறித்த போராட்டம் முன்னெடுக்கபட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந் துரையாடி தற்காலிகமாக அதிபர் ஒருவரை நியமிக்கின்றேன் என்று உறுதி அளித்தார். இதை அடுத்து போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. (ப)


## கிளி / வட்டக்கச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் இடம்பெறவுள்ளது. எனவே கல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்**
**காலம் :- 20.02.2021**
**நேரம் :- பிற்பகல் 2.00 மணி**

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கிளி / வட்டக்கச்சி மத்திய கல்லூரி

## யாழ் . அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோவில்

**பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்**

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் எதிர் வரும் 21/02/2021 இல் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கணபதி கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் இதில் பிள்ளையார் அடியார்கள், திருவிழா உபயகாரர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

ஆலயபணியில்
நிர்வாகம்.

## மணமகள் தேவை

1979.02.07 இல் பிறந்த 5'.6" உயரமுடைய சைவ உயர்குல மிருகசீரிடம் 2ஆம் பாதம் கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை.

**077 330 1798**

## INVITATION FOR BIDS (IFB)

## Valikamam South West Pradeshiya Sabha, Manipay Council Fund Project

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the following items.

**Tender Table**

| S.N | Item Description | Unit | Estimated Amount | Bid Security Amount (Rs) Valid till 11th May 2021 | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|
| 01 | Supplying Street Lamp 50W | 100 Nos | 5.0 Mn | 50,000.00 | 30 Days |
| 02 | Supplying Street Lamp 100W | 50 Nos | | | |
| 03 | Supplying Street Lamp – Monkey Cap | 2000 Nos | | | |
| 04 | Supplying LED Bulb – 15W | 2000 Nos | | | |

2. Bidding will be conducted through National Competitive Bidding. To be eligible for contract award the bidders shall not have been blacklisted and possess the valid certificate of Business Registration in the relevant field issued by a legal Authority.
3. Eligible interested bidders may obtain further information from Valikamam South west Pradeshiya Sabha, Manipay Jaffna TP .No: 021-2256650 / 021-2256647 on any working days from 09.00 hrs to 15.00 hrs A complete set of Bidding Documents in English language shall be referred or purchased by interested bidders on the submission of a written application with copy of Business Registration certificate to the **Chairman, Local Authority Procurement Committee Valikamam South West PradeshiyaSabha** from 09th February 2021 until 23rd February 2021 from 9.00 hrs.to 15.00 hrs. Upon payment of a non-refundable fees of Rs. 1000/=. The method of payment should be by cash.
4. Bids must be accompanied by a Bid Security for the mentioned above Bank Draft. Bids shall be delivered in two copies by Registered Post to the address **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Manipay** or direct on or before 14.30 hrs. On 24th February 2021. Late Bids will be rejected.
5. Bids will be opened soon after closing in the presence of the Bidders or their representatives who choose to attend.
6. Bids shall be valid up to 77 days 12th May 2021

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam Southwest Pradeshiya Sabha, Manipay.**
**09.02.2021**

## மரண அறிவித்தல்



**திரு**
**சாமுவேல் பாலச்சந்திரன் அரியரட்ணம்**
**(முன்னைநாள் தென்னிந்தியத் திருச்சபையின் எழுது வினைஞர், சென். ஜோன்ஸ் கல்லூரி நூலகர்.)**

சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு சாமுவேல் பாலச்சந்திரன் அரியரட்ணம் அவர்கள் நேற்று (08.02.2021) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் திரு சாமுவேல் சாம் அரியரட்ணம்- லில்லிநேசம் தம்பதியரின் அன்பு மகனும், ஜோசப்பின் சந்திரா அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல 14, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் எனும் அவரது இல்லத்தில் இன்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று, நல்லடக்கத்திற்காக புனித திருமுழுக்கு யோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சகோதரி (சந்திரா)

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1987



மறைவு 07 . 02 . 2021

**திரு. சுந்தரலிங்கம் நிருத்திகன்**

(அபிவிருத்தி உத்தியோகத்தர் மருதங்கேணி பிரதேச செயலகம்)

கீர்த்தனம், மனோகரா, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் நிருத்திகன் அவர்கள் 07.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுந்தரலிங்கம் சிவமலர் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பண்டத்தரிப்பைச் சேர்ந்த தேவதாசன் மரியல்லா (அமரர்) ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெஸ்லின் சுரேஜினி அவர்களின் பாசமிகு கணவரும், சுகேன்சிகாவின் அன்பு தந்தையும், கீர்த்திகன், வினித்தா, சுபாங்கி, வினூசிகன், சுபாங்கன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றோயல் புஸ்பலதா (பிரான்ஸ்), யூறிசன் ஜெனராஜ், ஆன் ஜெகலதா நைல்ஸ், பேக்ஸ்மன் மதன்ராஜ், ஆனந்தபாபு, ஜெனோசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2021) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளிற்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்
கீர்த்திகன்- 0771264731
சுந்தரலிங்கம்-0778461908
ஜெனராஜ்-0776780894

அல்வாய்.

## கொரோனா...

வேலணையைச் சேர்ந்த 73 வயதுடைய ஒருவரே தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர் கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் பக்கவாதப் பிரச்சினைக்காக சிகிச்சை பெற்றுவந்துள்ளார். அவருக்கு சுவாசம் தொடர்பான பிரச்சினையும் இருந்துள்ளது. அவர் சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவரது உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது. அவருக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சையளிக்கப்பட்டது.

அவரது உடல்நிலைமை மோசமடைந்ததை அடுத்து, அவர் அனுராதபுரத்தில் உள்ள கொரோனா சிகிச்சை மையத்துக்கு மாற்றப்பட்டார். எனினும் அவரது உடல்நிலை மிக மோசமடைந்ததை அடுத்து அவர் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இவை யாவும் கடந்த இருவாரங்களுக்குள் நடந்துள்ளன.

அவருக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தபோதும், சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை உயிரிழந்தார்.

"அவரது உடல் கொரோனா விதிகளுக்கு அமைய ஒரு சில மணி நேரத்துக்குள்ளேயே தகனம் செய்யப்பட்டது." என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட முதல் உயிரிழப்பு இதுவாகும். வடக்கு மாகாணத்தில் நான்காவது உயிரிழப்பாகும். முன்னதாக மன்னாரில் இருவரும், வவுனியாவில் ஒருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர். (எ-26)

## ஐ.நாவை...

வெல.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் குற்றச்சாட்டுக்களை அரசு முழுமையாக மறுக்கின்றது. இது போன்ற சம்பவங்கள் இலங்கையில் நடக்கவில்லை என்பதை பிரிட்டன் உள்துறை அமைச்சின் அறிக்கை உறுதிப்படுத்துகின்றது.

புலம்பெயர் தமிழர்களால் முன்வைக்கப்படும் பக்கச்சார்பான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இலங்கையின் 30 ஆண்டுகாலப் போரை நிறைவுக்குக் கொண்டுவந்த மனிதாபிமான நடவடிக்கையில் ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது- என்றார். (எ-22)

## மக்களுக்காகவே...

ருந்து விலகினோம். எவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டாலும் நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக்கொடுக்க மாட்டோம். நாட்டின் உரிமை நாட்டு மக்களுக்கே வழங்கப்படும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த சாசனத்தை முன்னிலைப்படுத்தி அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டின் நன்மைக்கு சர்வ மதங்களின் ஆசிர்வாதம் அவசியமாகும்.

அனைத்து மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. பௌத்த சாசனத்துக்கு எதிராக நல்லாட்சி அரசு செயற்பட்டது. அதனால் கடந்த காலங்களில் மதங்களுக்கிடையில் பெரும் பிணக்கு ஏற்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ராஜபக்ச பெயருடன் தொடர்புடையவர்களையும், எமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளையும் நல்லாட்சி அரசு, அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தியது. பௌத்த மதத்துக்கும், பௌத்த மதத் தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பௌத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்துத் தரப்பிலும் காணப்பட்டது. இவ்வாறான நிலையில் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பிக்குகளின் பெற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 30 வருட கால போர் பொருளாதாரம், சமூகம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

முடிக்க முடியாது என்று பலரும் குறிப்பிட்ட போரை முடிவுக்குக் கொண்டு வந்து குறுகிய காலத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதாரம் ஆகியவற்றை ஒருசேர முன்னேற்றமடையச் செய்தோம். போரை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசு ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது.

நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கறிந்தும் நாட்டுக்கு எதிரான தீர்மானத்திலிருந்து விலகினோம். நாட்டின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பதற்காகப் பல நெருக்கடியான தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

நாட்டின் உரிமையை நாட்டு மக்களுக்கே வழங்குவோம். தற்போதும்கூட நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சுயாதீன முறையில் தீர்மானம் எடுத்துள்ளோம். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மதத்தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர்.

அதனால் மதத் தலைவர்கள் அரசின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ஆட்சியை நல்வழிப்படுத்தத் தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (எ-22)

## திறந்தவெளியை...

தெரிவித்துள்ளதா வது:

1991இல் யாழ்ப்பாணக் கோட்டையைக் காப்பாற்றுவதற்கான போரில், நீங்கள் எதிரிக்கு முன்பாக நிறுத்தப்பட்டு திறந்த வெளியைக் கடந்து ஆபத்தில் சிக்கிய போது, உங்களையும் உங்கள் படையணியையும் நான் உட்பட முதலாவது சிங்கப்படைப்பிரிவினர் காப்பாற்றினோம்.

இன்று, 30 ஆண்டுகளுக்குப் பின்னர், 2021இல் அரசியல் அரங்கில், நீங்கள் மீண்டும் அதே தவறை செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் முகாமின் கட்டளையும் கட்டுப்பாடும் உடைந்துவிட்டது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. உங்களுக்கு வாக்களித்த 69 மில்லியன் மக்களை கேலி செய்வதன் மூலம், நீங்கள் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டமை தெரிகிறது. உங்கள் அதிகாரப் பசி ஆட்சி அந்த சக்தியால் அழிக்கப்படும்.

கோத்தாபயவுக்கு எனது அறிவுரை என்னவென்றால், நாடு உட்பட பெரும் நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், நான் உட்பட பொது எதிர்க்கட்சியின் அரசியல் தலைவர்கள் மற்றும் நண்பர்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கக் கூடாது, மேலும் இது பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளை அதிகரிக்கும். என்று பதிவிட்டுள்ளார். (எ-இ)

## பேரணியில்....

மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆகியோருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேரணிக்குத் தடை விதிக்கக் கோரி ஏஆர் அறிக்கை ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி நீதிமன்றால் உத்தரவொன்று வழங்கப்பட்டிருந்தது. நேற்று அதை முடிவுக்குக் கொண்டு வந்து, நீதிமன்றால் கொண்டுவரப்பட்ட உத்தரவு மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்து, ஏற்கனவே பேரணிக்குத் தடைகோரி வழக்குத் தொடர்ந்திருந்த அனைத்துப் பொலிஸ் நிலையங்களாலும் பி அறிக்கை ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி அறிக்கை ஊடாகத் தொடரப்படும் வழங்கானது விசாரணைக்குரிய வழக்காகும். அதில் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்கள் மன்றில் முன்னிலையாக வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அடங்கிய குழு ஒன்றுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மூத்த சட்டத்தரணி ரி.பரஞ்சோதி மற்றும் சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் ஆகியோர் தெரிவித்தனர். (எ-246)

## பெரும்பான்மை....

புரிந்துகொள்ள வேண்டும். தங்கள் காரியம் முடியும் வரையில் காலைப் பிடிப்பார்கள். அதன்பின் கழுத்தைப் பிடிப்பார்கள். இந்தியாவும் இலங்கைத் தமிழ் மக்களும் ஒருவர்க்கொருவர் உதவியாக இல்லா விட்டால் இருவருக்குமே அதோகதிதான்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன். அவர் வெளியிட்டுள்ள கேள்வி பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவித்துள்ளதாவது

அன்று தொட்டு இன்றுவரை இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் இந்தியாவை ஏமாற்றியே வந்துள்ளன. அதன் தொடர்ச்சியே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்தில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை இலங்கை அரசாங்கம் சீன நிறுவனமொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்க வழங்க உள்ளது எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது மிகவும் பாரதூரமான ஒரு விடயம். இந்தியாவின் தென்கோடி பாதுகாப்பாக இருக்கவேண்டுமானால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் உச்சளவு அதிகாரப் பகிர்வுடன் ஆட்சி செய்ய வேண்டும்.

கிழக்கு முனைய விடயத்தில் நடந்ததே நாளை 13ஆவது அரசியல் திருத்த விடயத்திலும் நடக்கும். ஒற்றை ஆட்சியின் கீழான எந்தத் தீர்வுக்கும் இந்த நிலைமையே ஏற்படும் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிங்கள அரசாங்கங்கள் கயிறு கொடுப்பதில் மன்னாதி மன்னர்கள். இதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

## வீடு புகுந்து...

குற்றத்தடுப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவில் செபஸ்ரியன் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை புகுந்து வீட்டில் உள்ளவரைக் காயப்படுத்தி 6 பவுண் தாலிக்கொடியை அபகரித்துச் சென்றனர் குற்றச்சாட்டிலேயே மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாடு யாழ் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கமைய மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பு பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த வீட்டில் இருந்து அபகரிக்கப்பட்ட தாலிக்கொடி மீட்கப்பட்டது. குறித்த தாலிக்கொடி கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரின் வீட்டு மலசலகுழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது. மற்றைய சந்தேகநபரின் வீட்டிலிருந்து இரண்டு பெரிய வாள் மற்றும் 250 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்கள் முதல்கட்ட விசாரணையின் பின்னர் யாழ்ப்பாண நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-20.111)

## மனித உரிமை...

இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் கனடா தலைமைத்துவம் வழங்குவது மீண்டும் தேவையாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கையில் போருக்குப் பின்னர் நல்லிணக்கத்தையும் நீதியையும் ஏற்படுத்துவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முக்கிய பங்களிப்பு செய்த நாடுகளில் ஒன்றாகக் கனடா காணப்பட்டது.

இலங்கையில் மனித உரிமை மீறல் மீண்டும் மோசமடைகின்றன. இந்நிலையில் இராஜதந்திர நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துவது தொடர்பாக கனடா கவனம் செலுத்துவது முக்கியமானது. இலங்கையை அதன் தற்போதைய பாதையில் செல்ல அனுமதிப்பதா அல்லது பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்களைப் பாதுகாத்து, சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதா என்ற முக்கிய கேள்வியுடன் இந்தமுறை மனித உரிமைகள் சபையின் அமர்வு ஆரம்பமாகின்றது. இந்த முயற்சிகளுக்குத் தலைமை தாங்கக்கூடிய இடத்தில் கனடா இருக்கின்றது. சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை தீவிரப்படுத்துவது பயங்கரங்களைத் தடுத்து நிறுத்தும்- என்றுள்ளது. (எ-22)

# 381 ஓட்டங்கள், 9 இலக்குகள்

## இந்தியாவா? இங்கிலாந்தா?

### பரபரப்பு நிலையில் சென்னை டெஸ்ட்






சென்னை, பெப். 9
இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளான இன்று இந்திய அணி வெற்றிபெறுவதற்கு மேலதிகமாக 381 ஓட்டங்களும், இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு மேலதிகமாக 9 இலக்குகளும் தேவை என்ற நிலை உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து இலக்குகளையும் இழந்து 578 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரூட் 218 ஓட்டங்களையும், சிப்லி 87 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 82 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பும்ரா, அஸ்வின் இருவரும் தலா 3 இலக்குகளையும், நடீம், இசாந் சர்மா இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சுந்தர் 33 ஓட்டங்களுடனும் அஸ்வின் 8 ஓட்டங்களுடனும் நேற்றுக் களமிறங்கினர். சுந்தர் மிகச் சிறந்த முறையில் விளையா[illegible] அரைச்சதம் கடந்தார். அஸ்வின் 3[illegible] ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பி[illegible] வரிசை வீரர்கள் தாக்கம் செலுத்த[illegible]ல்லை. முடிவில் இந்திய அணி [illegible]னத்து இலக்குகளையும் இழந்து [illegible] ஓட்டங்களைப் பெற்றது. சுந்தர் [illegible]மிழக்காமல் 85 ஓட்டங்களைப் [illegible]றார்.

[illegible]வீச்சில் பெஸ் 4 இலக்குகளையும், [illegible]டர்சன், ஆச்சர், லீச் மூவரும் தலா [illegible] இலக்குகளையும் வீழ்த்தினர்.

[illegible]ல் இன்னிங்ஸில் பெரும் முன்[illegible]லபெற்ற இங்கிலாந்து அணி [illegible]யாவை 'பொலோ ஒன்' செய்யப் பணிக்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் சென்னை ஆடுகளத்தில் ஐந்தாம் நாள் துடுப்பாட்டத்தில் இருக்கும் பெரும் சிரமத்தைக் கருத்தில்கொண்டு தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவது என்று தீர்மானித்தது இங்கிலாந்து. எனினும் இரண்டாவது இன்னிங்ஸ் இங்கிலாந்துக்குப் பெரும் சறுக்கல்தான். வெறும் 178 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் ரூட் பெற்ற 40 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். பந்துவீச்சில் அஸ்வின் 6 இலக்குகளையும், நடீம் 2 இலக்குகளையும், இசாந் சர்மா, பும்ரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

420 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி நேற்றைய நாள் முடிவில் ஓர் இலக்கை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரோகித் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கில் 15 ஓட்டங்களுடனும், புஜாரா 12 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்று இந்திய அணி வெற்றிபெறுவதற்கு மேலதிகமாக 381 ஓட்டங்களும், இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு மேலதிகமாக 9 இலக்குகளும் தேவை என்ற நிலை உள்ளது.

(ம)

**வேலையாள்கள் தேவை**
மில் வேலையில் அனுபவமுள்ள மற்றும் பொதி செய்யும் வேலைக்கும் வேலையாள்கள் தேவை.
**077 170 3741**

**தேவை**
**5000Km** இற்கு உட்பட்ட பாவனையில் உள்ள ஆட்டோ, பட்டா (TATA Company) வாகனம் தேவை.
**077 353 3809/ 076 647 0719**

**வேலையாள்கள் தேவை**
மானிப்பாயில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாள்கள் தேவை.
**077 337 0914/ 075 557 5324**

**கடை வாடகைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சத்திரசந்தி அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு.
(50 அடி நீளம் 18 அடி அகலம்)
**0778051655**

**வேலையாட்கள் தேவை**
பத்திரிகை நிறுவனமொன்றிற்கு
* **இயந்திர இயக்குனர்,**
* **இயந்திர உதவியாளர்,**
* **விநியோக ஊழியர்கள்**
தேவைப்படுகின்றனர்.
**077 120 9989**

## மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 11 . 04 . 1945 |  | 08 . 02 . 2021 |

**பரமேஸ்வரி தனபாலன்**

யாழ் சரவணையைப் பிறப்பிடமாகவும் சரவணை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி தனபாலன் அவர்கள் 08.02.2021 திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரியும், நூரந்தனையை சேர்ந்த பேரின்பநாயகம் -நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேரின்பநாயகம் தனபாலன் அவர்களின் ஆருயிர் மனைவியும், தனேந்திரன் (விரிவுரையாளர், தர்தாநகர், தேசிய கல்வியற்கல்லூரி), தனேந்திராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், இலிங்கப்பிள்ளை, ஞானசக்தி மற்றும் இலட்சுமிதேவி, சண்முகலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலீபா(ஆசிரியை, மே/பிலி/நுகேகொடை தமிழ் மகாவித்தியாலயம்), சதீஷ்குமாரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் ஞானசிங்கம், சகுந்தலாதேவி, சரோஜினிதேவி, சபாநாயகம், யோகநாயகம் ஆகியோரின் மைத்துனியும் சபேசன், பிரபாகரன், மிபாகரன், லகீந்திரன், கர்ஜினி, யாழினி, பாமினி, வத்சலா ஆகியோரின் சிறியதாயாரும் தாட்ஷாயினி, சுதர்ஷினி, ஜீவகுமாரி, சாரா ஆகியோரின் அத்தையும் ஆதித்யா, அஜந்திகா (கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்), கார்த்திகன் (கொ/றோயல் கல்லூரி), சாலினி, சந்தியா, சாரங்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வல்லிபுரநாதன்- பாக்கியலெட்சுமி, தவநாயகம்-சறோஜினிதேவி ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரிகைகள் நேற்று திங்கட்கிழமை 08.02.2021 இடம்பெற்றது. துக்க நிகழ்வுகள் சரவணையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நாச்சிமார் கோவிலடி,**
**சரவணை கிழக்கு,**
**வேலணை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**த.தனேந்திரன் மகன் - 0777686713**
**சதீஸ்குமாரன்-தனேந்தினி(மருமகள்-பிரான்ஸ்)**
**0033646686458**


இ[illegible]ரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.